பக்கங்கள்:பதினாறு

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 05 சனிக்கிழமை (18.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:143

# ஐ.நா. விசேட தூதுவர் நம்பியார்

# போர் நிறுத்தத்தை வலியுறுத்தவில்லை!

## கனரக ஆயுதப் பாவனையை நிறுத்த மட்டுமே அரசிடம் கேட்டாராம்

நியுயோர்க், ஏப்ரல் 18

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக இலங்கை சென்ற விஜய் நம்பியார் அந்நாட்டின் வடபகுதியின் முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நடைபெறும் போரை நிறுத்துமாறு கோரிக்கை எதனையும் அரசுத் தலைவரிடம் முன்வைக்கவில்லை.

அரசபடைகள் நடத்தும் தாக்குதல்களின்போது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று மட்டுமே வலியுறுத்திவிட்டு வந்துள்ளார் என்று ஐ.நாவின் இணைப் பேச்சாளர் பார்ஹான் ஹக் தெரிவித்தார் என்று செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

தமது இலங்கை விஜயத்தின் போது கேட்டறிந்த தகவல்களை அவர் ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டம் எதிலும் சமர்ப்பிக்கமாட்டார் என்றும் -

உத்தியோகப்பற்றற்ற நிலையில்கலந்துரையாடல் வடிவத்திலான தகவல் பரிமாற்ற முறையிலேயே எடுத்துரைப்பார் என்றும் - இங்கு தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலர்ளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்த பின்னர் எடுத்துக்கூறியது போலவே நம்பியாரும் கலந்துரையாடுவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்திருந்த ஐ.நா. செயலாளர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை நாளை

யாழ்ப்பாணம், ஏப்.18

காங்கேசன்துறைக்கும் திருகோண மலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

'கிறீன் ஓஷன்' கப்பல் நாளை காலை காங்கேசன்துறையை வந்தடைந்து மாலை திரும்பப் புறப்பட உள்ளது. எனவே கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களையும் அவசர தேவைக்காக பயணம் செய்ய இருப்

(16 ஆம் பார்க்க)

## உடனடியாகப் போர் நிறுத்தம் கொண்டு வருக! ஐ.நா. தலைமையகம் முன் தமிழர்கள் பேரணி!!

நியூயோர்க், ஏப்.18

- நியூயோர்க்கிலிருந்து ரங்கன்-

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவந்து அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்து நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகம் முன் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் சுமார் ஐயாயிரம் பேர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

நியூயோர்க் நேரப்படி காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி மாலை 4 மணி வரை நடைபெற்றது.

ஐ.நா. தலைமையகத்துடன் வெளிநாட்டு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு போரை நிறுத்த மறுத்தால் ஐ.நா. மூலம் கடும் நடவடிக்கை எடுக்குக!

### இந்திய அரசிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

புதுடில்லி, ஏப்.18

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று சிறிலங்கா அரசை இந்தியா வலியுறுத்தியிருப்பதை வரவேற்பதாகவும், இதை ஏற்று போரை நிறுத்த இலங்கை அரசு மறுத்தால் அதன் மீது ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசை வலியுறுத்தியிருக்கின்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தக் கோரிக்கையை ஏற்காவிடின் இலங்கையுடனான உறவைத் துண்டிக்குக!

### மன்மோகன், சோனியாவுக்கு கருணாநிதி வற்புறுத்து

புதுடில்லி, ஏப். 18

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் விடுத்துள்ள வேண்டுகோளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாமல், நடைமுறைப்படுத்தாமல் இருந்தால் இலங்கையுடன் அனைத்துத் தூதரக உறவுகளை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களைப் பாதுகாக்கக் கோரி மலேசியத் தமிழர் ஒபாமாவிற்கு மனு

### அந்நாட்டு அமெ. தூதரகத்திடம் கையளிப்பு

கோலாலம்பூர், ஏப்.18

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து அமெரிக்கா உடனடியாகத் தலையிட்டு போரை நிறுத்த வேண்டும் என்று கோரி மலேசிய தமிழ் மக்கள் சார்பில் அங்குள்ள அமெரிக்கத் தூதரகம் ஊடாக அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமாவுக்கான மனு கையளிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்தை இலங்கை நீடிக்கவேண்டும் மக்கள் மடிவதை முற்றாக ஏற்க முடியாது

### இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி

புதுடில்லி, ஏப்.18

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனித அவலம் தொடர்பாக இந்தியா ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. அரசின் போர் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதானது மேலும் பல பொதுமக்கள் கொல்லப்படுவதற்கும் காயமடைவதற்கும் வழிகோலியுள்ளது. இது முற்றாக ஏற்றுக்கொள்ளப்படமுடியாத ஒன்று.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் முடிவடைந்த தாக்குதல் நிறுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும்படி அவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் படுகொலைகளை நிறுத்தக் கோரி தீக்குளிப்பு

சென்னை ஏப்.18

இலங்கையில் தொடரும் படுகொலைகளை நிறுத்தக்கோரி சென்னையில் நேற்றிரவு 8.15 மணியளவில் ஒருவர் தீக்குளித்தார்.

கரூரைச் சேர்ந்த ஆ. சிவாநந்தம்

(16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இயன் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.போதனா வைத்தியசாலை இயன் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களை அன்று காலை சமுகமளிக்குமாறு பணிப்பாளர் டாக்டர் ஈ.தேவநேசன் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

எஸ்.குணசாந்தன் - பத்திரகாளி கோயில் வீதி, சுழிபுரம் கிழக்கு, கே.பிரபாங்கனி - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, பி.கஜானன் - 'கிரிகலக்சுமி', தாவடி வீதி, மானிப்பாய், கே.சதீஸ் - வடலியடைப்பு, மதவடி, பண்டத்தரிப்பு, எ.சபேசன் - இணுவில் தெற்கு, சுன்னாகம், ரி.நிசாந்தினி - வீரகத்திப்பிள்ளையார் கோயிலடி, இமயாணன், உடுப்பிட்டி, எம்.ஏ.சற்.இஸ்ராத் - பெண்கள் கல்லூரி ஒழுங்கை, ஏறாவூர், எஸ்.ஜனா - 3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை, எஸ்.பிரதீபன் - இகந்தபவனம், கே.கே.எஸ். றோட், தாவடி, கொக்குவில், எஸ்.காஞ்சனா - 355/2, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம், எஸ்.சண்முகவதனி - இராமகிருஸ்ணபவனம், கொக்குவில் கிழக்கு, எஸ்.சியாமினி - 163/1, விசுவமடு மேற்கு, முல்லைத்தீவு. (1)

## மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கலட்டியில் வைத்து கணவரைக் கடத்தியதாக மனைவி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ். கலட்டிப் பிள்ளையார் கோயிலடியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த ரட்ணசிங்கம் சந்திரகுமார் (வயது 28) என்பவரே கடத்தப்பட்டுள்ளதாக அவரது மனைவி எஸ்.சசிபாரதி முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மேசன் தொழிலாளியான தனது கணவர் கலட்டிப் பிள்ளையார் கோயிலடியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார் என தகவல் கிடைத்துள்ளது. அவரை விடுவிக்க ஏற்பாடு செய்யவும் என்று அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (1-25)

## சண்டிலிப்பாயில் சிறுவர் கழகங்களின் கலந்துரையாடல்

நாவாலி, ஏப்.18

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுவர் கழகங்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பிரிவில் இயங்கிவரும் சகல சிறுவர் கழகங்களின் அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (1-100)

## மேலும் 11 பேர் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஏப்.18

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து மேலும் 5குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் நேற்று முன்தினம் அழைத்துவரப்பட்டனர்.

இக்குடும்பங்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சின்னப்பு வேன்முருகோன்பிள்ளை



(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர், நல்லூர், முன்னாள் போஷகர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் "ROOD")

சிரித்தமுகம் சில்லென்ற பேச்சும்
கடமை உணர்வும் கருத்தொத்த வார்த்தையும்
நேற்றுவரை எம்முடன் நேசமாய் இருந்துவிட்டு
பார்விட்டுபோன பாதகம்தான் என்ன ஐயா!
காலை விடிந்ததும் காத்திருப்போம் உன்வரவை
பாலகர் முதல்முதியவர் வரை பகிடியால் ஈர்த்திடுவாய் - இன்று
பரிதவித்து நாம் நிற்க பார்விட்டுச் சென்றுவிட்டாய்
கதிகலங்கி நிற்கின்றோம் கண்ணீரை யார் துடைப்பார்.

16/2 ரீவியர் லேன், கலட்டி.

தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள்
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்

## நீங்காத நினைவுகளுடன்

தோற்றம் 13 * 10 * 1946



மறைவு 01 * 05 * 1997

திதி: அட்டமி

### அமரர் சபாரத்தினம் கனகசபாபதி

குடும்பத்தின் குலவிளக்காய் என்றும்
வாழ்ந்தவரே ஆண்டுகள்
பன்னிரெண்டு ஆனாலும்
மாறவில்லை உங்கள் நினைவுகள்

இணுவில் தெற்கு, இணுவில்.

க.சௌபாக்கியலட்சுமி (மனைவி).

(C/558108)

## 'யாழ்கோ'வின் இன்று மரம் நடுகை நிகழ்வு

இணுவில், ஏப்.18

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் மரம் நடுகைத்தினத்தின் ஒரு கட்டமாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் திருநெல்வேலியில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் இன்று மரம் நடுகை செய்யும் நிகழ்வை மேற்கொள்ள இருக்கிறது.

சங்கத் தலைவர் நா.சுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (1-45)

## அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நொபல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் ருவென்ரி/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை 9 மணிமுதல் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

* யாழ்.இந்து எதிர் யாழ்.மத்திய கல்லூரி.
* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி. (1-86)

## திறந்த பல்கலைக்கழகத்தில் இறுதி மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் 2007/2008ஆம் கல்வியாண்டுக்கான இறுதி மீட்டல் வகுப்பு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (04)

## பலாலி ஆசிரிய கலாசாலையின் இறுதிப் பரீட்சை திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக கலாசாலையின் அதிபர் எம்.இக்னேசியஸ் அறிவித்துள்ளார்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் இரண்டாம்வருட ஆசிரிய மாணவர்களுக்கு எதிர்வரும் 27ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 5ஆம் திகதி வரையும் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார். (50-9)


### தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
தொடர்பு: கொனிக்கா கலர்லாப்
இல: 14, ஸ்ரீவெங்கடேசர் வீதி,
யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பெரிய அரசடி வீதியில் பயன் தரு மரங்களுடன் கூடிய 3பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: திருமதி சகுந்தலாதேவி
இராசரத்தினம், ஆசிரியர் வீதி,
பெரிய அரசடி, சாவகச்சேரி.

### தையல் வேலை தெரிந்தவர்கள்தேவை

ஆண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் நான்கு பேர் தேவை.
ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: "சுபாஸ் தையலகம்"
பலாலி வீதி, உரும்பிராய்.
(இந்துக்கல்லூரி மைதானம் அருகில்)
தொ.பே:- 0776391346, 0772298909

### BARATHE

சித்தன்கேணி
மாதிரிப் பரீட்சைகள்
கணக்கீடு
20 பரீட்சைகள்
20 பரீட்சைக்கான கருத்தரங்கும் இறுதியில் நடைபெறும்.
ஆசிரியர்: திருக்குமரன் B.Com[Acc. Spl.]
Note:- A/L 2009, A/L DAY இரு பிரிவினரும் பங்கு பற்றமுடியும் வெளி மாணவர்களுக்கும் அனுமதி உண்டு.
* விண்ணப்ப முடிவு திகதி (20.04.2009)
இதன்பின் அனுமதி வழங்கப்படமாட்டாது.
* அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.


## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களின் நலன்களைப் பேணுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்வதென பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

சங்கத்தின் விசேட செயற்குழுவின் கூட்டம் நேற்று இடம்பெற்றபோது இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக ஊழியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்விசார ஊழியர்களின் பிரதிநிதிகளுக்கான பேரவைப் பிரதிநிதித்துவம், பொதுவான இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்துதல் என்பன அடங்கலாக ஊழியர்களின் நலன்கள் குறித்து நிர்வாகத்திடம் வழங்கப்பட்ட பன்னிரண்டு கோரிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான பதில்கள் எதுவும் இதுவரையும் கிடைக்கவில்லை. அதனாலேயே அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ள முடிவாகியது. தொடர்ந்தும் நிர்வாகம் இவ்விடயம் குறித்து மௌனமாக இருக்குமானால் தொடர் நிர்வாக முடக்கல் போராட்டத்தில் குதிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது - என்று உள்ளது. (அ-1)

## நூலகத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப்.18

அளவெட்டி மகாஜனசபை சனசமூக நிலையத்தின் 87 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமும் சைவப் பெரியார் செ.மயில்வாகனம் ஞாபகார்த்த நூல் நிலையத் திறப்பு விழாவும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வை.சுப்பிரமணியம் தலைமையில் மகாஜனசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் லயன் ஆ.ஜெனார்த்தனனும் சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் இ.அருணகிரியும், வலி.வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.இராஜகோபாலனும் கலந்து கொள்வர். (1-6)

## நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.18

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரம் ஓதுதலுடன் அபிஷேகமும் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கபிலராஜன்



இல.5, பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கபிலராஜன் நேற்று (17.04.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா மற்றும் காலஞ்சென்ற சிவயோகம் தம்பதியினரின் அன்பு மகனும் செல்வப்பத்மாவதி, ரகுலராஜன் (பவா), விமலராஜன் (பவி - France) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னத்துரை, ரஞ்சினி, மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.செல்லையா (தந்தை),
செ.ரகுலராஜன்
(பவா - சகோதரன்).

இல.5, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

### முருகன் சின்னராசா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சின்னராசா 17.04.2009 வெள்ளிக்கிழமை சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் சிவசோதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகன் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் பண்டாரி - சீதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சறோஜினி, குலதேவி (இந்தியா), லலிதா (ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி), சசிதேவி (சுவிஸ்), கர்ணன் (ஆசிரியர், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்), லகுணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனேஸ்வரன், லோகராஜா (இந்தியா), சங்கரநாதன், பரராஜசிங்கம் (சுவிஸ்), ஜெயாலினி (பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவி, மருதனார்மடம்), வேணுஜா (தாதிய உத்தியோகத்தர், கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் இஷந்தன், வினோஜ், கிரி, பிரதாபன், சகிதாபன், பகீரதன், நிஷாந்தி, மிதுசா, கானிலா, பிரவீன், மில்ற்ரன், நிமலி, அரிலோ, சமீரா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2009) சனிக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் உரும்பிராய் மேற்கு வேம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கர்ணன் (மகன், ஆசிரியர், N.D.E மாணவன் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவன், யாழ்ப்பாணம்).

உரும்பிராய் மேற்கு,
ஸ்ரீவைத்தீஸ்வரா வீதி,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனிதப் பேரவலத்தைத் தடுக்க வழியே இல்லையா....?

முல்லைத்தீவுக் கரையில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்கும் முயற்சிகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதற்காக ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியாக அவரது பிரதம அதிகாரி விஜய் நம்பியார் கொழும்பு வந்திருக்கிறார்.

மீண்டும் போர் இடைநிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று பிரிட்டனும், பிரான்ஸும் இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளன.

குறுகிய நிலப் பகுதியில் அடைக்கலம் புகுந்துள்ள மக்களின் உயிருக்கும், உடலுக்கும் பாதுகாப்பளிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

முல்லைத்தீவு மனிதப் பேரவலம் ஒன்று நடைபெறாமல் தடுத்துவிடவேண்டும் என்ற மனிதாபிமானம் நிறைந்த மனங்களுடன் இந்த வேண்டுதல்கள் வந்திருக்கின்றன.

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் குறுகிய நிலப்பரப்பில் சிக்குண்டுள்ள லட்சக்கணக் கான மக்களின் உயிர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற ஆதங்கத்துடன் மேற்கூறிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்தக் கோரிக்கைகளுக்குத் தக்க பலன் விளையுமா என்பதே இன்றைய சிக்கலான விடயமாக மாறியிருக்கிறது.

சிங்கள - இந்து புதுவருடத்தை முன்னிட்டு, தான் அறிவித்த இரண்டு நாள் தாக்குதல் நிறுத்த இடைவெளிக்கு மேலதிகமாக ஒரு மணி நேரத் தையாவது அதிகரிக்கமுடியாது என்ற நிலைப் பாட்டில் இலங்கை அரசாங்கம் உடும்புப் பிடியாக நிற்கிறது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தளவில், நீண்ட காலப் போர் நிறுத்தம் சாத்தியமற்றது என்ற நிலைப் பாட்டில் அது நிற்கிறது. அரசு வழங்கிய இரண்டுநாள் தாக்குதல் நிறுத்தத்தை மக்கள் தக்கவாறு பயன்படுத்தி வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் இதய சுத்தியுடன் செயற்படவில்லை என்பது அரசாங்கத்தின் வாதம்; குற்றச்சாட்டு.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையும் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளும் அரசாங்கம் வழங்கிய இரண்டு நாள் அவகாசத்தில் மக்கள் தம்மிடம் மிஞ்சிய அன்றாட தேவைக்குரிய பொருள்களைத்தானும் எடுத்துவரப் போதிய அவகாசம் கிடைத்திருக்காது என்ற நடைமுறைச் சாத்தியம் குறித்து பிரஸ்தாபித் துள்ளன.

இன்னும் சிலநாள் அவகாசம் வழங்கினால் கிளிநொச்சி நலன்புரி நிலையத்தில் சேர்க்கப்பட்ட 236 பேரைவிட அதிக எண்ணிக்கையான மக்கள் பாதுகாப்பு வலையத்தில் இருந்து வெளியே வந்திருப்பர் என்ற எதிர்பார்ப்புக் குறித்து நடுநிலையாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மக்களைப் பலவந்தமாகத் தடுத்து வைத்திருக்கிறார்கள் என்ற வாதம் மேலெழாமல் இருப்பதைத் தடுக்க வேண்டுமெனின், அரசு அதிக அவகாசத்தை வழங்கிப் பார்க்கலாம் என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்படுகின்றது.

கால அவகாசத்தை அதிகரித்திருந்தால் புலிகளை, தாமாக விரும்பி வெளியே செல்வேரை தடுக்கும் நிலைமையைத் தவிர்க்க ஏதுவாகும் என்ற கருத்தும் பொதுவாக நிலவுகிறது.

மனிதப் பேரவலத்தைத் தவிர்க்க வேண்டிய சூழலில், மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற தேவையினை உணர்ந்து வெளிநாடுகள் கரிசனை கொண்டிருக்கும் இவ்வேளையில் -

அரசாங்கம் வன்னி மக்களைத் தனது சொந்த மக்களாகக் கருதுகின்றது என்ற நிலைப்பாட்டில், மீண்டும் ஒரு தடவை அதிக நாள்களுக்கான போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்தால் மூன்றாம் தரப்புகளான ஐ.நா.வும், வெளிநாடுகளும் ஏதோ ஒரு வகையில் மனிதப் பேரவலத்தைத் தவிர்த்து வன்னி மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை அனுப்பு வதற்கு வாய்ப்பு உண்டாகும் எனவும் கருதப்படுகிறது.

அரசு இது விடயத்தில் மீள்பரிசீலனை செய்யுமா? மனித உயிர்களைக் காப்பாற்றும் மனிதாபிமானம் அதற்குப் பிறக்குமா? நன்றே செய்மின், இன்றே செய்மின்!

# இலங்கைத் தமிழர்களை ஜனநாயக வழிக்குக் கொண்டுவர இந்தியா அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்

## வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் சிவ்சங்கர் மேனன்



புதுடில்லி,ஏப்.18

இலங்கையில் கடந்த 23 வருட காலமாக நீடித்து வரும் இனப் பிரச்சினை காரணமாக இலங்கைத் தமிழ் சமுதாயம் பெரும் துயரில் மூழ்கியுள்ளது. அதை மீண்டும் ஜனநாயகப் பாதைக்குக் கொண்டுவர அனைத்து நடவடிக்கையும் இந்தியா மேற்கொள்ளும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் கூறினார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங் கையில் 23 ஆண்டுகளாக நீடித்து வரும் போரால், தமிழ்ச் சமுதாயம் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளது.

அதை மீட்டு மீண்டும் அங்கு இயல்புநிலை திரும்பவும், ஜனநாயக நடைமுறைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின் டனை நான் சந்தித்த போது இதுகுறித் துத்தான் முக்கியமாக விவாதித்தோம். இலங்கை நிலைவரம் மற்றும் அங்குள்ள அப்பாவி மக்களின் துயரம் குறித்து ஹலாரி கிளின்டன் கேட்ட றிந்தார். நம்மால் என்ன செய்ய முடியும் எனவும் கேட்டார். அதற்கு நான் நம்மால் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்ய லாம்-என்றேன்.

தற்போது இந்தியாவின் சார்பில் அங்கு ஒரு வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றோம். போர்க்களத்தில் இருந்து தப்பிவரும் மக்களுக்குத் தேவையானதைச் செய்து வருகின்றோம். அப் பகுதிமக்களுக்கு மறுவாழ்வுக்கான தேவைகளைச் செய்து வருகின்றோம். இதன்மூலம் வட இலங்கைத் தமிழ்மக்கள் விரைவில் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப முடியும்.

நீடித்துவரும் போரால் தமிழ் மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர். அது அவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம். இது இந்த நேரத்தில் மிகவும் முக்கியமானது- என்றார். (50)

# மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக பாடசாலை நாள்களை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, ஏப்.18

அடுத்த ஆண்டு முதல் பாடசாலை நாள்களை அதிகரிக்கச் செய்யும் வகையில் தவறாது 210 தினங்களுக்கு பாட சாலைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இதன் மூலம் மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப பரீட்சைத் தினங்களிலும் பாடசாலைகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

210 தினங்கள் அரசாங்க பாடசாலைகள் நடைபெறும் விதத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர் தரம் பரீட்சைகள் நடைபெறும் தினங்களிலும் வகுப்புக்களை நடத்தும் வகையில் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அரசாங்கப் பாடசாலைகள் சரியாக 210 தினங்கள் நடைபெற வேண்டும் எனினும் எந்த வருடத்திலும் குறிப்பிடப்பட்ட 210 தினங்கள் பாடசாலைகளை நடத்த முடிவதில்லை. பிரதானமாக ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தர பரீட்சைகள் நடைபெறும் தினங்கள் நீடிப்பதாலேயே இவ்வாறு நடத்த முடிவதில்லை. குறிப்பிட்ட 210 தினங்கள் பாடசாலைகள் நடத்தப்படாமையால் மாணவர்களுக்கு பாடத்திட்டங்களை சரிவரப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார். (50)

# சமூக பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த ஆண்டு யாழ்.மாவட்டம் தேசிய ரீதியில் முதலிடம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



நல்லூர்,ஏப்.18

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த ஆண்டில் யாழ்.மாவட்டம் இலங் கையிலேயே முதலிடத்தைப் பெற்றுள் ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் இத் திட்டத்திற்கென சிறப்பான பணிகளை மேற்கொண்ட சகல தரப்பு உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலர் கள், உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர்பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் உரையாற்றிய அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இத் திட்டத்தில் ஓய்வூய்தியர்களாக 2004 இல் 277 முதியவர்கள் மட்டமே இணைந்து கொண்டனர். இது படிப்படியாக உயர்ந்து 2008 இல் 14 ஆயிரத்து 843 முதியவர்கள் இத் திட்டத்தின் பயனாளிகளாக இணைந்துள்ளனர். இலங்கையில் முதலிடத்தைப் பெற்றிருக்கும் யாழ். மாவட்டம் மேலும் தொடர்ச்சியாக அதிக உறுப்பினர்களையும் உள்வாங்கி முன்னிலை யில் இருக்க அனைத்து உத்தியோகத்தர் களினதும் பணி மேலும் வேகமாக இருக்க வேண்டும் - என்றார். (50-111)

# வைத்தியசாலையிலும் உண்ணாவிரதத்தை தொடர்கிறார் கிருஸ்ணா அம்பலவாணர்

ஜெனிவா, ஏப்.18

வன்னியில் உடனடிப் போர்நிறுத்தம் அங்கே அல்லல்படும் மக்களுக்கு உடனடி மருத்துவ உதவி உட்பட 5 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வரும் சுவிஸ் தமிழர் பேரவையின் இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணர் கடந்த புதன்கிழமை காவல்துறையினரால் பலாத்காரமாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அவரது உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நீரருந்தவோ உணவுண்ணவோ மாட்டேன் என அவர் மறுத்து வரும் நிலையில் வைத்தியசாலையில் அவசரபிரிவில் வைத்து அவருக்கு மயக்க மருந்து வழங்கப்பட்டு சேலைன் ஏற்றப்பட்டது. எனினும் அவர் தொடர்ந்தும் நீரருந்தவோ, உணவுண்ணவோ மறுத்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இவர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சுவிஸ் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து தமக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதாக சுவிஸ் தமிழர் பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது உண்ணாவிரதம் தொடர்பில் அதிகளவில் செய்திகளை வெளியிட்டு வரும் சுவிஸ் நாட்டு ஊடகங்களுக்கும் தமிழ் ஊடகங்களுக்கும் தனது நன்றியை கிருஸ்ணா அம்பலவாணர் தெரிவித்துள்ளார். (50)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 06 | 19.04.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.ப. 08.54 வரை |
| நட்சத்திரம்: | திருவோணம் |
| | காலை 08.59 வரை |
| சுபநேரம்: | 09.02 - 10.32 |
| ராகுகாலம்: | 04.32 - 06.02 |

# போர் நிறுத்தத்தின் பின் மோதல் தவிர்ப்பு வலயத்தில் உக்கிரத் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன - ஐ.நா.

ஜெனிவா, ஏப்.18

இலங்கை அரசாங்கத்தினால் புத்தாண்டை முன்னிட்டு அறிவிக்கப்பட்டிருந்த ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து மோதல் தவிர்ப்பு வலயத்தில் உக்கிர மோதல்கள் ஆரம்பாகியுள்ளதென ஐக் கிய நாடுகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் பஹாரான் ஹக் தெரிவித்துள்ளார்.

மோதல் தவிர்ப்பு வலயத்தில் வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும், மோதல் தவிர்ப்பு வலயத்தில் பலமான ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப்படவில்லை எனப் படையினர் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனர்.

சுமார் 1030 தொன் எடையுடைய மனிதாபிமான நிவாரணப் பொருள்கள் அடங்கிய கப்பலொன்று இன்னும் மூன்று தினங்களில் மோதல் தவிர்ப்பு வலயத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மோதல் தவிர்ப்பு வலயத்தில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்கள் குடிதண்ணீர் மற்றும் கழிவறை வசதிகளின்றி அல்லலுறுவதாக அவர் தெரிவித்துள்ளார். (50)

# வன்னி மக்களுக்கு இந்து அமைப்புக்கள் தொடர்ந்தும் உதவி வழங்குகின்றன

யாழ்ப்பாணம், ஏப்.18

வன்னியிலிருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உதவுவதற்கு மேலும் பல இந்து அமைப்புக்கள் நிதியுதவி வழங்கியுள்ளன.

நல்லை ஆதீனத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் வைத்து இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் ஐயனார் கோயில் பரிபாலன சபையினர் 38410 ரூபாவையும்-

நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் ஆலயம் 50 ஆயிரம் ரூபாவையும்-

'நியந்திரி' அமைப்பு 50 ஆயிரம் ரூபாவையும் 15 சேவைகளையும்-

கோண்டாவில் மேற்கு பொது அமைப்புக்கள் 40 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளன.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளிடம் இந்த உதவிகள் கையளிக்கப்பட்டன. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவின் ஒத்திகை நிகழ்வின் போது....

# ஐ.பி.எல். திருவிழா இன்று ஆரம்பம் முதல் போட்டியில் மும்பை - சென்னை!

## உலக கிரிக்கெட் ரசிகர்களின் முழுக் கவனமும் தென்னாபிரிக்கா மீது!

கேப்டவுன், ஏப்ரல் 18

உலக கிரிக்கெட் ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் போட்டித் தொடர் இன்று தென்னாபிரிக்காவில் கோலாகலமாகத் தொடங்குகின்றது.

இன்றைய முதலாவது போட்டியில்



இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், நட்சத்திரவீரர் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதுகின்றன.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் இரண்டாவது தடவையாக இம்முறை நடக்கிறது. இந்திய மக்களவைத் தேர்தல்கள் நடைபெறுவதன் காரணமாக இம்முறை போட்டிகள் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே.

இலங்கை உட்பட உலகின் முன்னணி வீரர்கள், முன்னாள் வீரர்கள் பங்குபற்றுகின்ற இந்த மாபெரும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிக்கு மிகுந்த வரவேற்பும் பரபரப்பும் ஏற்பட்டிருக்கின்றது.

8 அணிகள் மோதும் இந்தக் கிரிக்கெட் தொடர் 37 நாள்கள் நடைபெறவுள்ளது.

வழக்கமாக ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டிகள் 3 மணி நேரத்தில் முடிந்து விடும். ஆனால் இந்த முறை ஒவ்வொரு ஐ.பி.எல். ஆட்டமும் 3, 1/4 மணிநேரம் நடைபெறும். கூடுதலாக 15 நிமிடங்கள் சேர்க்கப்பட்டு இருக்கிறது. அதாவது ஒவ்வொரு இன்னிங்ஸின் போதும் 10 ஓவர்கள் வீசப்பட்டதும், ஏழரை நிமிடங்கள் இடைவெளி விடப்படும். முழுக்க முழுக்க விளம்பர நோக்கத்துக்காக நேரம் அதிகரிக்கப்பட்டு இருப்பதாக நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

வணிக நோக்கமே இந்தப் புதிய இடைவேளை திட்டத்திற்கு காரணம் என்று கூறப்பட்டாலும், ஆபிரிக்காவில் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறும்படங்கள் இந்த இடைவெளியில் காண்பிக்கப்படவுள்ளன. இதன் மூலமும் ஐ.பி.எல்.லுக்கு வருவாய் கிட்டுகிறது. மொத்தம் 118 இரண்டரை நிமிட விளம்பர இடைவேளைகள் விற்பனைக்குத் தயாராகவுள்ளனர்.

ஐ.பி.எல். கிரிக்கெட் ஒளிபரப்பும் உரிமையை சொனி மற்றும் உலக ஸ்போர்ட்ஸ் குறூப் (டபிள்யூ.எஸ்.ஜி.) பெற்றுள்ளன. இவை, 9 ஆண்டுகால ஒளிபரப்புக்கு இந்திய மதிப்பில் ரூ.8,200 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளன.

ஒவ்வொரு ஆட்டத்துக்கும் 33 நிமிடங்கள் விளம்பரங்கள் ஒளிபரப்ப நேரம் தரவேண்டும் என்று ஒளிரப்பு முகவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஓவர்கள் முடிவிலும் 40 வினாடிகளும், விக்கெட் விழுந்தால் அந்த இடைவெளியில் சுமார் ஒரு நிமிடமும் விளம்பரத்தை ஒளிபரப்ப அவர்கள் திட்டமிட்டுள்ளனர். ஆனால், ஓர் இன்னிங்ஸில் மொத்தம் 2 அல்லது 3 விக்கெட்டுகள் மட்டுமே விழுந்தாலோ அல்லது 15 ஓவர்களுக்குள்ளேயே போட்டிகள் முடிவடைந்தாலோ அது ஒளிபரப்புதாரர்களுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் என்றும் நிகழ்ச்சித் தயாரிப்பு அதிகாரி தெரிவித்தார்.

இதற்கான ஆரம்ப ஒத்திகை நிகழ்வு தென்னாபிரிக்காவில் நேற்றுமுன்தினம் நடந்தது.

ஐ.பி.எல். தலைவர் லலித்மோடி, இந்திய முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை நிர்வாகிகள் ஒரு வாகனத்தில் வந்தனர். சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்களுடன் 'டிரம்ஸ்' சிவமணி டிரம்ஸ் இசைத்து அசத்தினார். நடனக் கலைஞர்களும் ஆடிப் பாடி குஷிப்படுத்தினார்கள். வீரர்கள் உணர்ச்சிபூர்வமான சந்தோஷத்தில் காணப்பட்டனர்.

அணிகளின் உரிமையாளர்களான ஷாருக்கான் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்), பிரித்தி ஜிந்தா (கிங்ஸ் லெவன் பஞ்சாப்), ஷில்பா ஷெட்டி (ராஜஸ்தான் ரோயல்ஸ்) உள்ளிட்ட ஹிந்தி சினிமா நட்சத்திரங்கள் வண்ணமயமான அணிவகுப்பில் ஜொலித்தனர்.

இந்தப் போட்டி கடந்த 3 வாரங்களுக்கு முன்பு தான் இந்தியாவில் இருந்து தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது. குறைந்த காலத்திலேயே சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சியும், அதற்காக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கு நன்றியையும் ஐ.பி.எல். தலைவர் லலித்மோடி தெரிவித்துக்கொண்டார்.

## புறப்பட்டார் சச்சின்!



மும்பை, ஏப்ரல் 18

ஐ.பி.எல். ருவென்ரி 20 தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சச்சின், நேற்று முன்தினம் அதிகாலை தென்னாபிரிக்கா புறப்பட்டார்.

ஐ.பி.எல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராகக் களமிறங்குகிறார் சச்சின். நேற்று முன்தினம் அதிகாலை தென்னாபிரிக்கா செல்லும் விமானத்தில் சச்சின் புறப்பட்டார். கடந்த முறை காயம் காரணமாக பல போட்டிகளில் சச்சின் பங்கேற்கவில்லை. இதனால் மும்பை இந்தியன்ஸ் அணியால் சோபிக்க முடியாமல் போனது. இந்த முறை முழு உடற்தகுதி மற்றும் சிறந்த பயிற்சியுடன் செல்லும் சச்சின், அணிக்கு கோப்பையைப் பெற்றுத்தருவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. அவரது அனுபவமும் அவருக்கு பெரும் பக்கபலமாக இருக்கும்.

## 'பத்மஸ்ரீ' விருது வழங்கும் விழாவை புறக்கணித்ததால்

# டோனி, ஹர்பஜன் ஆகியோர் மீது நீதிமன்றில் கிரிமினல் வழக்கு

பத்மஸ்ரீ விருது வழங்கும் விழாவைப் புறக்கணித்த இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் டோனி மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் மீது பீகார் நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வீரர்களுக்கு மத்திய விளையாட்டு துறை அமைச்சர் எம்.எஸ்.கில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பத்மஸ்ரீ விருது வழங்கும் விழாவில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வுசெய்யப்பட்ட இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் டோனி, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. இதையடுத்தே அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 5ஆம் நிலை வீராங்கனை வீனஸிடம்

# போராடி வீழ்ந்தார் சானியா

சார்லஸ்டன், ஏப்.18

பமிலி சர்க்கிள் ரென்னிஸ் போட்டியின் 2ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா, வீனஸ் வில்லியம்ஸிடம் போராடித் தோல்வி கண்டார். அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டனில் பமிலி சர்க்கிள் ரென்னிஸ் போட்டி நடந்துவருகிறது.

இதில் பெண்கள் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் 100ஆம் நிலை வீராங்கனை சானியா மிர்சா (இந்தியா), உலகின் 5ஆம் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸை (அமெரிக்கா) எதிர்கொண்டார்.



2 மணி நேரம் நடந்த இந்த ஆட்டத்தில் முதல் செற்றை இழந்த சானியா அடுத்த செற்றை தனதாக்கினார். இதனால் ஆட்டம் 3ஆவது செற்றுக்கு நீடித்தது. 3ஆவது செற்றில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்த சானியாவால் அதனை தக்க வைக்கமுடியவில்லை. சுதாகரித்து ஆடிய வீனஸ் அந்த செற்றை கைப்பற்றினார். இதனால் சானியா மிர்சா 1-6, 6-3, 2-6 என்ற செற் கணக்கில் போராடி வீனஸ் வில்லியம்ஸிடம் தோல்வி கண்டார்.



மொனாக்கோவில் உள்ள மான்டிகார்லோவில் நடந்து வரும் ரோலக்ஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டத்தில் லியாண்டர் பயஸ் (இந்தியா) - லூகாஸ் (செக் குடியரசு) ஜோடி 2-6, 7-6, 10-8 என்ற செற் கணக்கில் ஸ்பெயினின் ஆல்பர்ட் மான்டெனஸ் - டாமி ரோப்ரெடோ இணையை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

# டேவிஸ் கோப்பை ரென்னிஸ்; இந்திய அணி அறிவிப்பு

புதுடில்லி, ஏப்.18

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மோதவுள்ள டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியின் ஆசிய - ஓசியான குறூப் 1இல் 3ஆவது மற்றும் கடைசிச் சுற்று ஆட்டத்தில் இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் சென்னையில் மே 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் அவுஸ்திரேலியா பாதுகாப்புப் பிரச்சினையை எழுப்ப இருப்பதால், இது பற்றி ஆய்வு செய்து தனது இறுதி முடிவை சர்வதேச ரென்னிஸ் சங்கம் நேற்று அறிவிக்கவிருந்தது.

இந்திய ரென்னிஸ் சங்க பொதுச்செயலாளர் அனில் கன்னா கூறுகையில், ''சென்னைக்கு சென்று டேவிஸ் போட்டியில் ஆடும்படி அவுஸ்திரேலியாவை, டேவிஸ் ரென்னிஸ் சங்கம் கேட்டுக் கொள்ளும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உலகத்திலேயே சர்வதேச போட்டிகளை விளையாடுவதற்கு இந்தியா அதிலும் குறிப்பாக சென்னை மிகவும் பாதுகாப்பான இடமாகும்.

நாங்கள் எங்கள் பாதுகாப்பு திட்டத்தை சர்வதேச ரென்னிஸ் சங்கத்திடம் வழங்கி உள்ளோம். போட்டிக்கு 200 பேரை பாதுகாப்புக்காக ஒதுக்குவதாக சென்னை பொலிஸ் அதிகாரி உறுதி அளித்திருக்கிறார். இந்தப் போட்டிக்கு அவுஸ்திரேலியா தங்களது முழு அணியை அனுப்பும் என்று நம்புகிறோம்'' - என்றார்.

இந்த நிலையில் இந்த போட்டிக்கான இந்திய டேவிஸ் கோப்பை ரென்னிஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் தைபே நாட்டுக்கு எதிரான 2ஆவது சுற்றில் வெற்றிபெற்ற அணியே இதிலும் களமிறங்க உள்ளது.

இதன்படி லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, ரோகன் பொபண்ணா, சோம்தேவ் தேவ்வர்மன் ஆகியோர் இந்திய அணியில் இடம்பெற்றுள்ளனர். அணியில் விளையாடாத தலைவராக எ[illegible] செயல்படுவார். இந்தப் போட்[illegible]யில் வெற்றி பெறும் அணி உலக சுற்றுக்கு தகுதிபெறும் [illegible] குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்கு பிரதேச செயலக தேசிய இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

தேசிய கலை இலக்கியப் பெருவிழாவை யொட்டி காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு:

**கட்டுரை-சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் - நி.யோகநாயகி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), இரண்டாமிடம்- வி.பாலேந்திரன் (யா/யாழ்ற்றன் கல்லூரி), மூன்றாமிடம்- பி.கிருபலா (யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்).

**கவிதை -சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் - வி.பாலேந்திரன் (யா/யாழ்ற்றன் கல்லூரி), இரண்டாமிடம்- ப.ரேவதி (யா/சுந்தரமூர்த்தி நயனார் வித்தியாலயம்), மூன்றாமிடம்- நி.யோகநாயகி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.).

**சிறுகதை-சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் -பி.கிருபலா (யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), இரண்டாமிடம்- சி.சிவரஞ்சினி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), மூன்றாமிடம்- க.தவரஞ்சனா (யா/வியாவில் சைவ வித்தியாலயம்).

**கட்டுரை-கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் - யோ.காந்தரூபன் (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), இரண்டாமிடம்- ந.ராஜினி (யா/வியாவில் சைவ வித்தியாலயம்), மூன்றாமிடம்- சி.விசாளினி (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.).

**கவிதை-கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் - கு.அமுதா (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), இரண்டாமிடம்- யோ.காந்தரூபன் (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), மூன்றாமிடம்- சி.தர்ஷிகா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்).

**சிறுகதை-திறந்த பிரிவு**

முதலாமிடம் - குகினா சாம்பசிவம் (விளானை, களபூமி, காரைநகர்), இரண்டாமிடம்- சுகந்தினி தர்மலிங்கம் (இலந்தை சாலை, காரைநகர் ), மூன்றாமிடம்- கணகலிங்கம் கலைச்சந்திரன் (நடுத்தெரு, காரைநகர்)

**கவிதை-திறந்த பிரிவு**

முதலாமிடம் - கோபால் விசாகலிங்கம் (ஆலடி, காரைநகர் ), இரண்டாமிடம்- சதாசிவம் செல்வரூபி (மல்லிகை, காரைநகர்), மூன்றாமிடம்- கோபாலகிருஷ்ணர் நிஷாந்தினி (சடையாளி, காரைநகர் ).

**பாடல்-திறந்த பிரிவு**

முதலாமிடம் - ச.சிவதாஸ் (அல்லின் வீதி, காரைநகர்), இரண்டாமிடம்- கோ.விசாகலிங்கம் (ஆலடி, காரைநகர் ), மூன்றா மிடம்- சோபனா மகேந்திரன் (விளானை, களபூமி, காரைநகர் ). (04- 250)

# நினைவு மண்டபம் புனரமைப்பு

சுழிபுரம் , ஏப்.18

''நிஷா'' புயல்காற்றினால் பாதிக்கப்பட்ட வழக்கம்பரையிலுள்ள சபாநாயகர் நினைவு மண்டபம், நினைவுச் சபையின் உதவியுடன் பொறியியலாளர் த.துரைலிங்கம் தலைமையில் புனரமைப்பு செய்யப்படுகின்றது.

நினைவு மண்டபத்துக்கு அருகில் வீழ்ந்து கிடந்த பாரிய அரச மரத்தை அப்புறப்படுத்தல், கட்டடத் திருத்த வேலை செய்தல், அழகுபடுத்தும் மை பூசுதல் போன்ற கருமங்கள் நிறைவு செய்யப்படவுள்ளன. இந்த நினைவு மண்டபம் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்லவும், பஸ் பிரயாணிகள் தங்கி பிரயாணம் செய்யவும் நீண்ட காலமாக பயனபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (04-28)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வெவ்வேறு வீதி விபத்துகளில் சிக்கி தென்மராட்சியில் 7 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.18

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு சிறுமிகள் உட்பட ஏழு பேர் காயமடைந்தனர்.

நுணாவில் பகுதியில் வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த மாடு வீதியின் குறுக்கே வந்தபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதியதில் அதில் பயணித்த மூவர் காயமடைந்தனர்.

நுணாவிலைச் சேர்ந்த ரி.செல்வதாசன் (வயது 23), கல்வயலைச் சேர்ந்த ரி.கிரி தரன் (வயது 23), எஸ்.விமலதாசன் (வயது 26) ஆகியோரே காயமடைந்தவராவர்.

இதேவேளை- வீதி வளைவுகளில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக் கொண்ட இரு சம்பவங்களில் இருவர் காயமடைந்தனர்.

கச்சாய்ப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆர்.லோகேஸ்வரன் (வயது 30) என்பவரும் மீசாலை மேற்கில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பொன்னம்பலம் இராசமணி (வயது 63) என்பவரும் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து கச்சாயைச் சேர்ந்த எஸ்.வினஜா (வயது 11), மீசாலையைச் சேர்ந்த ஆர்.காருணி (வயது 11) ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்த ஏழு பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (04-207)

# மழைக்கு ஒதுங்கியவர் மரக்கிளை வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம் , ஏப்.18

மழையின்போது மரத்தின்கீழ் ஒதுங்கியவரின் தலையில் மரக்கிளை வீழ்ந்து காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கே.மதிமுகன் (வயது 23) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். இதேவேளை எறிகணை வீச்சினால் பாதிக்கப்பட்ட தென்னைமரத்தில் கிளி பிடிக்க சிறுவன் ஏறியபோது மரம் முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை சரசாலை வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சத்தியசீலன் வினுசயன் (வயது 13) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இவ்விருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (04-207)

# உயிர்த்த ஞாயிறு அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம் , ஏப்.18

கிறிஸ்தவ [illegible]ரின் புனித தினங்களில் ஒன்றான யேசு பிரானின் உயிர்ப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி பிரதேசத்தில் பக்திமயமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கத்தோலிக்க, கிறிஸ்தவ தேவாலயங்களில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (04-207)

# யாழ்.மாவட்ட வாக்காளர்களின் விவரங்களுடன் அடையாள அட்டை இலக்கத்தைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.18

2009ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்புத் திருத்தத்தின் போது யாழ்.மாவட்ட வாக்காளர் விவரங்களுடன் அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி தேர்தல்கள் ஆணையாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.தேர்தல் மாவட்டப் பதியும் அலுவலர் க.கணேஷ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

1986ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக வீடு வீடாகச் சென்று வாக்காளர் விவரங்களைச் சேகரிக்க முடியாமையாலும், பெரும்பாலானோர் தற்காலிகமாக தமது வதிவிடங்களை விட்டு வெளியேறியுள்ளமை காரணமாகவும் யாழ்.மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பு மீளாய்வின் போது விசேடமான முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் 2009ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு மீளாய்வின் போது புதிய தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாக வாக்காளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. ஏற்கனவே வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளவர்கள் தங்கள் அடையாள அட்டை இலக்கத்தை தாங்களாகவோ அல்லது அவர்களது குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள் மூலமாகவோ கிராம அலுவலர்களால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி வழங்கலாம்.

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் தற்போது வசிக்கும் கிராம அலுவலரூடாக தத்தமது தகவல்களை சமர்ப்பிக்க முடியும். வெளிமாவட்டங்களில் தங்கியுள்ளவர்கள் வழமைபோன்று அந்தந்த கிராம அலுவலர், உதவி ஆணையாளர் மூலம் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

இதற்காக ஒவ்வொரு யாழ்.பிரதேச செயலகத்திலும் யாழ்.மாவட்ட சகல வாக்காளர் இடாப்புகளும் தகவலைப் பெறுவதற்காக பொதுமக்கள் பார்வைக்காக ஜூன் முதலாம் திகதி தொடக்கம் வைக்கப்பட்டிருக்கும் எனவும், சகல பொது மக்களும் தங்கள் வாக்காளர் பட்டியலை தொடர்ந்து உரியமுறையில் பேணுவதற்கு தவறாது கிராம உத்தியோகத்தர் மூலம் தகவல்களை சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன், இன்றைய சூழ்நிலை யில் வாக்காளர் இடாப்பில் பெயர்கள் இடம் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# சாவகச்சேரி மக்கள் வங்கியில் ஏ.ரி.எம். சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம் , ஏப்.18

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் விரைவில் தன்னியக்க பணப்பரிமாற்றல் இயந்திர வசதி (ஏ.ரி.எம்.) ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான கருவிகள் பொருத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அடுத்த மாத முற்பகுதியில் இக்கருவிகள் இயங்க ஆரம்பிக்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (04-207)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவருக்கு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்த வருட இறுதியாண்டுப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கலாசாலையில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கலாசாலையால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை அன்றைய தினம் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாம் வருட மாணவர்கள் தமது அனுமதி அட்டைகளை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது . (204)

# 2009ஆம் ஆண்டுக்கான உரிமம் பெறாத உணவகங்களுக்கு தடை விதிப்பு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட 2009 ஆம் ஆண்டுக்கான உரிமம் பெறாத தேநீர்க்கடைகள் , உணவு, உப உணவுப்பண்டங்கள் விற்பனை செய்யும் நிறுவனங்கள், ஐஸ்கிறீம் விற்பனை நிறுவனங்கள் யாவும் தடைசெய்யப்பட்டுள்ளதாக வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார்.

இதனை மீறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதுவரை உரிமம் பெறத்தவறிய உணவு விற்பனை நிறுவனங்கள் யாவும் தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்து மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சைப் பெறும் சந்தர்ப்பத்தில் மட்டுமே உரிமம் வழங்கப்பட்டு நிறுவனங்கள் மீளவும் இயங்க அனுமதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார் (4-20)



இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் அதிக பங்களிப்பை வழங்கியவர்களுக்கான பரிசளிப்பு விழா யாழ்.செயலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சமூக சேவைகள் அமைச்சின் யாழ்.இணைப்பதிகாரி எஸ்.ஏ.உதயன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ், சங்கானை பிரதேச செயலர் திருமதி ரி.பாபுவுக்கு பரிசில் வழங்குவதை இரண்டாவது [illegible], நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதனுக்கு பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் -

நிகழ்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலுக்குள்ளான இலங்கைத் தூதரகத்தின் சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்

## நோர்வேயில் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.18

கடந்த 12ஆம் திகதி நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்டஈட்டை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் என நோர்வே தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதரகம் கடந்த 12ஆம் திகதி தாக்கப்பட்ட உடனேயே நோர்வே அரசாங்கம் இத் தாக்குதலை வன்மையாக கண்டித்ததுடன், இச் சம்பவம் தொடர்பாகக் தனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டது. பொலிஸார் இலங்கை தூதரக வளாகத்துக்கான பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளனர்.

இந்த தாக்குதல் இலங்கையில் உள்ள பலருக்கு மனத்துயரை ஏற்படுத்தியுள்ளது என்பதை நோர்வே விளங்கிக் கொள்வதோடு, எமது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தனது தனிப்பட்ட வருத்தத்தையும் ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக தெரிவித்து இருக்கிறார்.

தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு நோர்வே பொலிஸார் அதி முக்கியத்துவம் வழங்குவதோடு, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

தற்போதைய நிலைமைகளின் கீழ் நோர்வே அரசாங்கம் தொடர்பாளராக செயற்பட முடியாது என இலங்கை அரசாங்கம் நோர்வேக்கு அறிவித்துள்ளது. நோர்வேயும் இதே கருத்தையே கொண்டுள்ளது.

ஏனெனில், சமாதானச் செயற்பாடுகள் இல்லாதபோது தொடர்பாளராக செயற்படுவதற்கு எதுவுமே இல்லை. நோர்வே, இலங்கையுடன் நீண்டகால நட்பை கொண்ட நாடு என்ற வகையில் ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்தை உருவாக்கவே தனது சகல விதமான செயற்பாடுகள் மூலமும் முயற்சிக்கிறது.

ஆனால், தற்போதைய நிலைமையில் முழுக் கவனமும் யுத்த வலயத்தில் சிக்கி பரிதாபமான நிலையில் உள்ள பொது மக்கள் பற்றியதாகவே இருக்கவேண்டும். அத்துடன், மேலதிகமாக இரத்தம் சிந்தாமல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும்''. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (50)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

23 ஆம் ஆண்டு



றெஜினோல்ட் பாலச்சந்திரன் (ராஜன்)

மண்ணில் 06★09★1946 விண்ணில் 05★04★1986

3 ஆம் ஆண்டு



பாலச்சந்திரன் றொஷான்

மண்ணில் 30★11★1979 விண்ணில் 18★04★2006

எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்களால் உங்கள் நினைவை மறக்க முடியவில்லையே!

இல. 35, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.


BASIC / ADVANCED - ENGLISH & SINHALA PERSONAL CLASSES & TRANSLATION

பிரத்தியேக மொழிபெயர்ப்பு மூன்று மொழிகளிலும் செய்து தரப்படும்

T.SAGATHEVAN, B.A.London - Trilingual Tutor/Translator (PVT)

46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

T.P. 222 3520/0778210178



## தேவை

யாழ்.மெயின் வீதியில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையான 'பிலிப்ஸ் நேசிங் ஹோம்' (PHILIPS NURSING HOME) இற்கு ஒபரேசன் தியேட்டர் அனுபவமுள்ள, மருத்துவ சிகிச்சை அனுபவமுள்ள மருத்துவ தாதிகள் தேவை.

தாதிய சேவையை பழக விரும்புபவர்களுக்கும் சிறந்த வழிகாட்டலின் கீழ்பயிற்றுவிக்கப்படும்

நேர்முகத்தேர்வு -19.04.2009(ஞாயிறு) காலை 8.00 மணி- 10.30 வரை

PHILIPS NURSING HOME

221, மெயின் வீதி (யாழ்.சிறைச்சாலை முன்பாக), யாழ்ப்பாணம்

தொ.பே. 0212224172



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பிற பாடசாலைகளில் இணைந்து 2009 ஆம் ஆண்டு க. பொ.த. (சா/த)பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். 7A யும் அதற்கு மேலான பெறுபேறுகளையும் பெற்றுக்கொண்ட மாணவர்களை 20.04.2009 திங்கட்கிழமை மு.ப. 11.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவிருக்கும் மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். இந்து
ஆரம்பப் பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
பா.அ.சங்கம்,
ப.மா.சங்கம்.

## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



18.04.2009 இன்று ஓய்வுபெறும்

### உயர்திரு.இராசா செல்வக்கதிரமலை

(நடத்துநர், ரிக்கெற் பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை சாலை)

''கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான் உண்டிவ் வுலகு''

37 வருட சேவையில் தனது நெகிழ்ந்து நடக்கும் பண்பினால் பல்லாயிரக்கணக்கான மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்று அரும்பணியாற்றி இன்று 18.04.2009 ஓய்வுபெறுவதையிட்டு அவரின் சேவையை பாராட்டுவதோடு அவர் பல்லாண்டுகாலம் சந்தோசமாக நீடூழி வாழவும் ஓய்வுகாலம் சிறப்புற அமையவும் வாழத்துகின்றோம்.

க.நமசிவாயம் குடும்பம்,
செ.பரராஜசிங்கம் குடும்பம்,
சி.விஜயசிறி குடும்பம்,
மு.கதிர்காமலிங்கம்.

''தமிழகம்'',
கொற்றாவத்தை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 19.03.2009 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (18.04.2009) சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் அதிகாலை முதல் கிரியைகள் ஆரம்பமாகி 8 மணியளவில் கல்லெடுப்பும், முற்பகல் 11 மணியளவில் வீட்டுக்கிருத்தியமும் நடைபெறுகையில் தாங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஆ.தவேஸ்வரி (மனைவி),
ஆ.இரகுநாதன் (சமுர்த்தி முகாமையாளர்),
ஆ.சண்முகநாதன் (ஆசிரியர்).

பிராமணன் தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(84403)


கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
நெல்லியடியிலும், யாழ்நகரிலும்.....

Diploma in Computerized Accounting

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

Quick Book + ACCPAC + MYOB

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

யாழ்நகரிலும் நெல்லியடியிலும் ஆரம்பம்:

Sat & Sunday
19/04/2009 } 11.00
25/04/2009 } AM

Wed & Friday
21/04/2009 } 11.00
23/04/2009 } AM

Tally Accounting
புதிய பிரிவுகள்
ஆரம்பமாகிறது.

COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road, Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422



ஒருவாரகால முழுநேர கற்கைநெறி...

Diploma in Computer Hardware Engineering

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற,
சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப்பெற
உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சிநெறி

◆Assembling ◆Upgrading ◆Trouble Shooting
◆Fault Finding ◆Repairing ◆Servicing
◆Software Installation ◆Configuring Networking Etc.....

✓ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் தொடர்பான பூரண அறிவினை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
✓ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்ரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம்செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை
✓ தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கபபடுகின்றது.

Free Installation CD

Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம்: 20/04/2009 - 09AM

ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்

COMPUTER EXPRESS
Institute of Information Technology
#167, Kasthuriyar Road, Jaffna.
Phone - 021 222 8250/ 0777222422


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைப் பிரதேசப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விவரம்

வலி வடக்கு, ஏப்.18

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற குழுநிலைப்போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விவரங்கள் வருமாறு:

கரப்பந்தாட்டம் (ஆண்கள்)

1ஆம் இடம் - பன்னாலை கணேசன் வி.க, 2ஆம் இடம் - காங்கேசன்துறை ஐக்கிய வி.க, 3 ஆம் இடம் - அளவெட்டி டயானா வி.க.

கரப்பந்தாட்டம் (பெண்கள்)

1ஆம் இடம் - பன்னாலை கணேசன் வி.க, 2ஆம் இடம் - அளவெட்டி விநாயகர் வி.க, 3ஆம் இடம்-அளவெட்டி ஞானவைரவர் வி.க.

உதைபந்தாட்டம் (ஆண்கள்)

1ஆம் இடம் - மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் வி.க, 2 ஆம் இடம் - காங்கேசன்துறை ஐக்கிய வி.க, 3ஆம் இடம் - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க.

உதைபந்தாட்டம் (பெண்கள்)

1ஆம் இடம் - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 2ஆம் இடம் - அளவெட்டி பாரதிதாசன் வி.க, 3ஆம் இடம் - மல்லாகம் சன்மார்க்க வி.க.

துடுப்பாட்டம் (ஆண்கள்)

1ஆம் இடம் - தெல்லிப்பழை பூமா வி.க, 2ஆம் இடம் - அளவெட்டி டயானா வி.க, 3ஆம் இடம் - அளவெட்டி கிராம அபிவிருத்திச் சங்க வி.க.

துடுப்பாட்டம் (பெண்கள்)

1ஆம் இடம் - மல்லாகம் சன்மார்க்க வி. க, 2ஆம் இடம் - அளவெட்டி பாரதிதாசன் வி.க.

கபடி (ஆண்கள்)

1ஆம் இடம் - இளவாலை வெண்புறா வி.க, 2ஆம் இடம் - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 3ஆம் இடம் - அளவெட்டி டயானா வி.க.

கபடி (பெண்கள்)

1ஆம் இடம் - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 2ஆம் இடம் - அளவெட்டி பாரதிதாசன் வி.க, 3ஆம் இடம் - மல்லாகம் சன்மார்க்க வி.க.

எல்லே (ஆண்கள்)

1ஆம் இடம் - அளவெட்டி கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 2ஆம் இடம் - மல் லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 3ஆம் இடம் - மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் வி.க.

எல்லே (பெண்கள்)

1ஆம் இடம் - தெல்லிப்பழை கலை ஒளி வி.க, 2ஆம் இடம் - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 3ஆம் இடம் - அளவெட்டி பாரதிதாசன் வி.க.

வலைப்பந்தாட்டம்

1ஆம் இடம் - தெல்லிப்பழை யூனியன்ஸ் வி.க, 2ஆம் இடம் - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க, 3ஆம் இடம் - தெல்லிப்பழை கலையொளி வி.க. (50-86)

# சேபமாலைமுத்து ஞாபகார்த்த கிரிக்கெட் இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் அமரர் ஏ.எவ்.செபமாலைமுத்து ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் யாழ்.பல்கலைக் கழக உத்தியோகத்தர் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து தீவகக்கல்வி வலய விளையாட்டு அணி மோதும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் இணைப்பாளர் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் கலந்து கொள்வார். (50)

# பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்; வலயச் சம்பியனானது யாழ்.மத்திய கல்லூரி

வலி.வடக்கு, ஏப்.18

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ்.கல்வி வலய சம்பியனாகியது.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 09 விக்கெட்டுக்களை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

யாழ்ப்பாணக் கோட்டமட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை 07 விக்கெட்டுக்களினாலும் 60 ஓட்டங்களினாலும் வெற்றிபெற்று கோட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (04-86)

# சாவகச்சேரி வின்டோஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம்,ஏப்.18

சாவகச்சேரி ல'பன்ஸ் கழகம் பிரதேச விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 16 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை அண்மையில் நடத்தியது.

மட்டுவில் மோகனதாஸ் வி.க மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் இருபது அணிகள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி வின்டோஸ் வி.க. அணி சாவகச்சேரி ஸ்ரீமுருகன் வி.க. அணியை 51 ஓட்டங்களால் வென்று சம்பியனாகியது. (50-207)

# அரியாலை ஏ.கே.எஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,ஏப்.18

கவிபாரதி சனசமூக நிலையம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சோலைபுர அடிடாஸ் அணியை எதிர்த்து விளையாடிய அரியாலை ஏ.கே.எஸ் அணி வெற்றிபெற்றது. இச்சுற்றுப் போட்டிக்கான முதலாவது வெற்றிக் கிண்ணத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் றீகன் வழங்கினார்.

இரண்டாம் இடம்பெற்ற அணிக்கான கிண்ணத்தைச் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஜே/83 கிராம சேவகர் கி.மகாலிங்கம் வழங்கிக் கௌரவித்தார்.

இப்போட்டியில் 3 ஆவது இடத்தினை போஸ்ரார் அணி பெற்றுக்கொண்டது. இப்போட்டியில் 20 அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (50)

# கே.சி.சி.சி கிண்ணப் போட்டியொன்றில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி

வலி வடக்கு, ஏப்.18

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் முப்பது ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும், வடமராட்சி உடுப்பிட்டி ஈகிள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 28.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மதுசன் 46 ஓட்டங்களையும் ஜேம்ஸ் 41 ஓட்டங்களையும் எடிசன் 39 ஓட்டங்களையும் நவநீதன் 34 ஓட்டங்களையும் றொகான் 25 ஓட்டங்களையும் கோபி 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.


ஈகிள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சங்கர் 5.2 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் செந்தூரன் 02 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும்,

நிருசாந், ராஜ்குமார், அமர்நாத், அசோக் முரளி முறையே 29, 30, 40, 45, 50 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஈகிள் விளையாட்டுக் கழகம் 21 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

இராஜ்குமார் 32 ஓட்டங்களையும், செந்தூரன் 19 ஓட்டங்களையும் சங்கர் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோபி 04 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் செல்ரன் 02 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் மதுசன் 04 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் றொகான், பிரகாஸ் முறையே 04, 16 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)




# மாவட்ட மட்டப் போட்டிகளில் விளையாட உடுவில் மகளிர் கல்லூரி தகுதி

வலி.வடக்கு,ஏப்.18

உடுவில் மகளிர் கல்லூரி வலய மட்டத்தில் இடம்பெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகள் நான்கில் வெற்றி பெற்று முதல் தடவையாக மாவட்டப் போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

கூடைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றதால் மாவட்ட மட்டப் போட்டிகளில் விளையாட உடுவில் மகளிர் கல்லூரி தகுதி பெற்றுள்ளது. இதேவேளை ஹொக்கிப் போட்டியிலும் மாவட்ட மட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி பங்கேற்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (04-86)

# ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் மத்தி சம்பியனானது

வலி வடக்கு, ஏப்.18

ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகம் அமரர் பிரதீப் ஞாபகார்த்தமாக நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று பிரதீப் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 25:21, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

மூன்றாவது சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 28:26 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

நான்காவது சுற்றை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற சுற்றுக் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகியது. (50-86)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையேயான இந்துக்களின் பெரும் துடுப்பாட்டப் போர் இரண்டாவது ஆண்டாகவும் சமநிலையில் வெற்றி,தோல்வி இன்றி முடிவடைந்துள்ளது. இப்போட்டியில் இரு அணிகளுக்குமான வெற்றிக் கிண்ணத்தை ஈ.எஸ்.பி.நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் வழங்குவதையும் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரர்கள் தமக்கு கிடைத்த பரிசுகளுடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் கற்றல், இணைப்பாட விதான செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் சிறுவர் பாதுகாப்பு நிதியம், தென்மராட்சிக் கல்வி வலயம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பல்வேறு நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இதில் யாழ். திருச்சபைக் குரு முதல்வர் வணபிதா எஸ்.பி.நேசகுமார் அடிகள் தலைமை உரை யாற்றுவதையும் தொலைக்காட்சி அறையினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வணபிதா என்.ஜே.ஞானப் பொன்ராஜா திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன், தென்மராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.சத்தியநாதன், நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.



புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய முன்னாள் செயலாளரும் தெய்வக் குழந்தைகள் இல்ல இயக்குநருமான ஓய்வுபெற்ற அதிபர் த.வோ.பூராசாவின் முதலாம் ஆண்டு நினைவு நாள் பேருரை நிகழ்வு அண்மையில் தெய்வீகக் குழந்தைகள் இல்லத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் அன்பரசி பூராசா தலைமையுரை நிகழ்த்துவதையும் அன்னாரின் ஞாபகார்த்தமாக புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட முகப்பு வளைவினை அருட் தந்தை பீற்றர் துரைரட்ணம் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பசுப்பால் பொருள்கள் விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட படம். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பிரதேச கால்நடை வைத்தியர் வைத்திய கலாநிதி திருமதி சகுந்தலா சுப்பிரமணியம் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் சங்கத்தின் தலைவர் த.குணபாகன் மற்றும் சங்க நிர்வாகிகள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம் : அச்சுவேலிச் செய்தியாளர்)



நவக்கிரி அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசாவுக்கு மாலைசூட்டி வரவேற்பதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அச்சுவேலி வர்த்தகப் பிரமுகர் வே.குருபரன் மற்றும் வித்தியாலய அதிபர் எஸ்.பகவத்சிங் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (50-11)



யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகமும் யாழ்.றோட்டரிக் கழகமும் இணைந்து அண்மையில் நவாலி அரும்புகள் முன்பள்ளிக்கு ஒரு தொகுதித் தளபாடங்களையும், கற்றல் உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கியிருந்தன. இதன்போது எடுக்கப்பட்ட படம்.




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் குருதிக்கொடை முகாம் அண்மையில் கழக அலுவலகத்தில் இடம்பெற்றது. கழக உறுப்பினர்களும், லியோ கழகங்களின் உறுப்பினர்களும் குருதிக்கொடை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து தசாப்தங்களாக இசைக் கலையோடு இணைந்திருக்கும் காரைநகர் என்.கே.வீராச்சாமி



ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தவில் கலைஞனாக உலகெங்கும் புகழ் பரப்பி வருபவர் காரைநகர் என்.கே. வீராச்சாமி அவர்கள். அவருடைய இசைப் பயண அனுபவங்களை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்

**கேள்வி:** உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் கூறுங்களேன்?

**பதில்:** கலைச் சிறப்பும், சமயச் சிறப்பும், மொழிச் சிறப்பும் வாய்ந்த தென் இந்தியாவில் இருந்து தனது பத்து வயதில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திற்கு ஆஸ்தான வித்துவானாக வருகை தந்தவர் எனது தந்தையாரான அமரர் கைலாய கம்பர் அவர்கள். கம்பர் பரம்பரையில் திருக்கைலாய அடிவாரத்திலிருந்து தோன்றிய ஒரு கலைப் பரம்பரையாக கம்பர் பரம்பரை அமைகின்றது. அவரது மூன்றாவது புத்திரனாக ஈழத்துச் சிதம்பரத்தின் அயலில் 12.12.1949இல் பிறந்தேன். எனது சகோதரனாக அமரர் நாதஸ்வர வித்துவான் என்.கே.கணேசனும், இரு சகோதரிகளும் உள்ளனர். எனக்கு இரு மகன்கள், இரு மகள்கள் உள்ளனர். மகன்மார் இருவரும் எனது தொழிலாகிய தவில் கலையிலேயே தாமாகவே ஆர்வம் கொண்டு இன்று வளர்ந்து வருகின்றனர். கலை உலகில் சிறப்படைய இறையருளும் அவர்களது தொழில் பற்றும் கைகூட இறைவனை வேண்டுகின்றேன்.

**கேள்வி:** தாங்கள் இக்கலையில் இந்த நிலைக்கு வரக் காரணமானவர்கள் பற்றி...

**பதில்:** எனக்கு ஆரம்ப குரு ஆண்டிகேணி ஐயனாரும், எனது தந்தையாராகிய அமரர் கைலாயக் கம்பருமே. எனது தந்தை நாதஸ்வர கலைஞராக இருந்ததாலும் தவில் கலையை முறைப்படி கற்றவர், எனக்குக் கற்பித்தவர். எனது தந்தையார் தவில் கலையை நீ கற்றுக்கொள் என்றார். அவரின் பூரண ஆசியுடன் அவரிடமே கற்றுத் தேர்ந்தேன். இந்நிலைக்கு உயர இறையருள், எனது தந்தை, எல்லோருக்கும் பொதுவான எனது தவில் ரசிகர்கள் போன்றோரே காரணம்.

**கேள்வி:** தாங்கள் ஆஸ்தான வித்துவானாகச் சேவை செய்யும் ஈழத்துச் சிதம்பரம் பற்றி...

**பதில்:** ஈழத்துச் சிதம்பரம் ஆறு, ஏழு தலைமுறைகளையும் தாண்டிய ஓர் ஆன்மீக வரலாற்று ஆலயம். இந்த ஆலயத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக இசைக் கலையோடு இணைந்திருப்பது பெருமை. இவ்வூர் மக்களுக்கு மட்டுமன்றி, உலக மக்களுக்கும் அருள் பாலிக்கும் ஓர் உன்னத ஆலயம், எம் ஊரவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் இந்த இறைவனை மறப்பது இல்லை. இறைவனும் அடியவர்களை மறப்பது இல்லை.

**கேள்வி:** தங்களது கலைப்பணியில் மறக்கமுடியாத சுவையான அனுபவம் பற்றிக் கூறுங்கள்?

**பதில்:** எனது 16 வயதில் உலகத்தில் மாமேதை தவில் சக்கரவர்த்தி அளவையூர் தெட்சணாமூர்த்தியுடன் இணைந்து சுன்னாகம் ஐயனார் ஆலயத்தில் தவில் வாசித்ததை இன்றுவரை இனிமேலும் மறக்கமுடியாது. அதியுயர் சிறப்பு வாய்ந்த தவில் என்ற இசைத் தோல் கருவியின் அத்தனை பரிமாணங்களும் தெரிந்த ஒரு மாபெரும் இசைக்கடல் அவர். அவருடன் இணைந்து கச்சேரி செய்தது இறைவன் தந்த ஒரு வரம்தான். இது மட்டுமன்றி அளவையூர் என்.கே.கோவிந்தசாமி, என்.ஆர்.சின்னராசா, நாதஸ்வர மேதைகள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள், அளவையூர் சிதம்பரநாதன், என்.ஆர். புண்ணியமூர்த்தி, சுந்தரமூர்த்தி, இவர்களுடன் அமரத்துவம் அடைந்த எனது சகோதரர் பாசத்திற்குரிய என்.கே.கணேசன் ஆகியோருடன் இணைந்து பல ஆண்டுகள் கச்சேரி வாசித்தமை எனது மறக்க முடியாத மாபெரும் அனுபவம் ஆகும்.

**கேள்வி:** காரைநகரில் தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் நிலை எவ்வாறு உள்ளது?

**பதில்:** இடப்பெயர்விற்கு முன்னர் பெருமளவு கலைஞர்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். தற்போது நானும் எனது தம்பியின் பிள்ளைகள் என ஒரு சில கலைஞர்களே வாழ்ந்து வருகின்றோம். ஏனையவர்கள் யாழ்.நகர் மற்றும் வெளிநாடு என இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

**கேள்வி:** காரைநகர் கலைஞர்கள் சொந்த ஊரில் வசிக்காதது பற்றி உங்கள் கருத்து?

**பதில்:** பல விடயங்களில் கலைஞர்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக இங்கு இருப்பது குறைவு. கல்வி, வசதி என்று சொல்லிக்கொண்டு போகலாம். எனினும் கலைஞர்கள் ஊரில் இருப்பதுதான் சிறப்பு. நமது ஊரே காரைநகர் அல்ல. கலைநகர் அல்லவா. கலைஞர்களும், மக்களும் வேறு அல்ல. இருவரும் இன்ப துன்பங்களைப் பங்கீடு செய்ய வேண்டும். பெற்ற தாயையும் பிறந்த மண்ணையும் என்றும் நேசிப்பவர்கள் நாம். நமது காரை மண்ணில் இருந்து கலைச் சேவைசெய்து கொண்டிருக்கின்றேன். இந்த ஊர்க் காற்றைச் சுவாசிப்பதே ஒரு சுகம். கலைஞர்களோடு ஆசாரமும், ஒழுக்கமும் இருக்க வேண்டும். கலைப் பணி ஓயாது. அது ஓர் ஓடுகின்ற ஆறு. ஓடிக்கொண்டே இருக்கும். வானொலி, தொலைக்காட்சி எனப் பல நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி உள்ளேன். ஆனாலும் இந்த ஊர் போல வரவில்லை. மனம் ஆண்டிகேணி ஐயனாரிடமே இணைந்துள்ளது. அவரால் கொடுக்கப்பட்ட கலைப் பணி. கலைப் பயணம் அவருக்கே எனது சகல வாய்ப்புக்களும் அடக்கம். நானும் எனது கலையும் அவராலேயே உருவானது. அவர் இன்றி ஓர் அணுவும் அசையாது.

**கேள்வி:** காரை மக்கள் இன்று ஆலய உற்சவங்களுக்கு தவில், நாதஸ்வரக் கலைஞர்களை அழைப்பதற்கு மிகவும் சிரமப் படுகின்றார்களே. இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** கலைக்கு விலை கிடையாது. விலை பேசவும் கூடாது. கலைஞர்களும் அதிக விலை பேசக் கூடாது. ரசிகர்களும், திருவிழா உபயகாரர்களும் இன்றைய நிலையை உணர்ந்து தமது மனச்சாட்சிப் படி கலைக்கு கூலி தரவேண்டும். வாழ்க்கை செலவு உயரும்போது சில விடயங்கள் தவிர்க்கப்படமுடியாதவை.

**கேள்வி:** வளர்ந்து வரும் தவில் கலைஞர்களுக்கு தாங்கள் தரும் செய்தி என்ன?

**பதில்:** தவில் கலைஞர்கள் மட்டுமல்ல நாதஸ்வரக் கலைஞர்கள், வயலின் கலைஞர்கள், மிருதங்கக் கலைஞர்கள், வாய்ப்பாட்டு வித்துவான்கள் அனைவரும் இக் கலையை சட்டதிட்டத்துடன் கற்றுக் கொள்ளவேண்டும். முழுமையான இறை நம்பிக்கையுடன் இந்தியக் கலைஞர்கள் பாடம் பண்ணுவது போல இவர்களும் பாடம் பண்ணி பயபக்தியுடன் தொழிலில் கண்ணியத்துடன் ஈடுபடவேண்டும். நாதஸ்வர, தவில் கலைஞர்கள் சகல கலை நுட்பங்களையும் அறிந்து கொள்ளவேண்டும். வருந்திக் கற்று, பயிற்சி பண்ணி மேல் வர

**நேர்காணல்: டர்ஷிகன்**

வேண்டும். இத்துடன் கலைஞர்களை அரசாங்கமும் மக்களும் அ[illegible]க்கவேண்டும். கலைஞர்கள் பொதுவ[illegible]ர்கள். இனம், மதம், ஜாதி, நிறம் அனைததிற்கும் அப்பாற்பட்டதே இசை. இசைக்கு அனைவரும் இசைந்து, இசையை வளர்க்கவேண்டும் என்பதே எமது விருப்பம். அது இறை அருளால் எதிர்காலத்தில் கை கூட வேண்டும்.

**கேள்வி:** புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?

**பதில்:** எமது ஊர் காரைநகர். காரைநகர் மக்கள் இயல்பாகவே கலைஞர்களை ஆதரிப்பவர்கள். இவர்களின் பேராதரவுடனேயே எம்மால் உயர முடிந்தது. இவர்கள் மட்டுமன்றி யாழ்ப்பாண மக்களும் கலைஞர்களை மறக்காதவர்கள். இவர்கள் எங்கிருந்தாலும் இறை அருளால் இறை பயத்துடன் வாழவேண்டும். நமது கிராமியப் பழக்க வழக்கங்களை கலாசாரங்களை மறக்காமல் மனம் கொள்ள வேண்டும். எமது அழியாத சொத்துக்கள் அவை. இது மட்டுமன்றி கலைஞர்களை, கலைகளை, திருவிழாக்களை மறக்காமல் இருந்தால் சரி, இவற்றில் வளர்ச்சியையும் காண வேண்டும்.

# இனரீதியான கோஷங்களை முன்வைத்து வாக்கு வேட்டையாடுவது தவறான வழி

## ஜனநாயக ஐக்கிய முன்னணித் தலைவர் கருத்து

கொழும்பு,ஏப்.18

''சிறுபான்மை மக்கள், சிறுபான்மையின வேட்பாளர்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டுமென்றும் அதன் மூலமே தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றுமான ஒரு புதிய கோஷத்தை முன்வைத்து வாக்குகளைப் பெற்றுக்கொள்ள சில அரசியல் தலைமைகள் மேற்கொள்ளும் முயற்சி விபரீதமானதாகும். இது இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை மேலும் விரிவுபடுத்தும்''

- இவ்வாறு ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கொழும்பு தெமட்டகொட, சஹசபுரவில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :-

தேர்தல் வெற்றிக்காக மக்களை உசுப்பிவிட்டு அவர்களை அரசியல் பலிக்கடாவாக்க சிறுபான்மை அரசியல் கட்சித் தலைவர்கள் சிலர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இது மேலுமொரு இனக்கலவரத்துக்கு வித்திடும் நடவடிக்கையாகும். சிறுபான்மை மக்கள் தமது இனம் சார்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டுமெனவும் அதன் மூலம் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் - இனரீதியான கோஷத்தை முன்வைத்து வாக்குகளைப் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளை ஜனநாயக ஐக்கிய முன்னணி எதிர்க்கிறது. இது ஒரு பிழையான தத்துவமும் யதார்த்தத்துக்குப் பொருத்தமற்ற கூற்றுமாகும்.

ஜனநாயக ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை உள்ளடக்கிய ஒரு கட்சி இது. மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றில் நாம் போட்டியிட்டு பிரதிநிதிகளைப் பெற்றிருக்கிறோம். தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகள் இக்கட்சியின் மூலம் இந்தச் சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

நாங்கள் இனரீதியாக வாக்குகள் கேட்டிருந்தால் மூவின மக்களும் எமக்கு வாக்களித்திருக்கமாட்டார்கள். மூவினத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும் எமது கட்சியின் மூலம் தெரிவுசெய்யப்பட்டிருக்கமாட்டார்கள். வெறுமனே உரிமைக் கோஷத்தை எழுப்பி மக்களைக் குழப்பிவிடும் இந்த சிறுபான்மைத் தலைமைகள் தமது சொந்தக்காலில் நிற்காது பெரும்பான்மை கட்சிகளும் சிறுபான்மை மக்களை அடகு வைத்து வாழ்க்கை நடத்துவதன் காரணம் என்ன? சுயலாப அரசியலுக்காக மக்களைத் தூண்டிவிட்டு ஆதாயம் தேடும் இந்த அரசியல் முகவர்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக தமது கட்சியையும் அடகுவைத்து பெரும்பான்மை கட்சித் தலைவர்களுக்கு துதிபாடுவதன் உள் நோக்கம்தான் என்ன?

ஒலிவாங்கிக்கு முன்னால் நின்று ஓலமிடும் இந்த அரசியல்வாதிகள் புரளிகளை மட்டுமே கிளப்பிவிட்டு மக்களின் மனங்களை வென்றெடுத்துவிடலாமென நம்புகின்றனர். இவர்களின் செயற்பாடுகளால் மக்களுக்கு எத்தகைய நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. எனவேதான் மக்களுக்கு பொருத்தமான அரசியலை நடத்த முன்வந்திருக்கும் ஜனநாயக ஐக்கிய முன்னணிக்கே வாக்களியுங்கள் என்று நாம் உரிமையுடன் கேட்கிறோம் - என்றார். (சி)

# தனியார் பஸ்களில் கட்டணம் அறவீடு குறித்து விசாரணை


கொழும்பு,ஏப்.18

புத்தாண்டு தினங்களின்போது தனியார் போக்குவரத்து பஸ்களில் அதிகளவிலான கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளன என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

50 தனியார் பஸ்களுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் விமலசேன தெரிவித்தார்.

இந்த அதிகபட்ச கட்டண அறவீடு தொடர்பாக தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், அவ்வாறு கூடுதலான கட்டணம் அறவிட்டது நிரூபிக்கப்பட்டால் குறித்த பஸ் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் விமலசேன குறிப்பிட்டார். (சி)

# மக்கள் முகம்



புத்தூர் கிழக்கு குமாரசுவாமி வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் ''பிரசித்த நொத்தாரிசாக'' உள் நாட்டலுவல் அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2009.03.31ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியினை ஏற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணக் கழகத்தின் தாபகர் கிளையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவர் மட்டுவில் மகாவித்தியாலயம், சாவச்சேரி டிறிபேர்க் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவனும் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

★ ★ ★ ★ ★ ★

சாவச்சேரி நகர சபையில் முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் 1 இல் கடமையாற்றிய திருமதி தங்கராசா ஈஸ்வரி தனது 30 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி நகரசபை ஊழியர் நலன்புரி சங்கத்தினரால் பிரிவுபசார விழா அண்மையில் நடத்தப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் செ. உமாபாலன் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கரவெட்டி பிரதேசசெயலகத்தில் கிராம அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றிய இ.பரராஜசேகரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் இடமாற்றம் வழங்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★

நுணாவில் மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் அண்மைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் - க.சண்முகலிங்கம், உபதலைவர் - நா.தண்டாயுத[illegible]ாணி, செயலாளர் - த.வேலாயுதபிள்ளை, பொருளாளர் - இ.பாலசிங்கம் ஆகியோரு[illegible]ன் நிர்வாக சபை அங்கத்தவர்களாக [illegible]ருமாக மொத்தம் 7 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (50-59)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்




செல்வன்
பாலசுப்பிரமணியம் கண்ணதாசன்
(கண்ணன்)
(ஓட்டோ உரிமையாளர்)

செல்வன்
செல்லன் கமலதாசன்
(கமல்)
(ரேடியோ திருத்துநர்)

| அன்னை மடியில் | அனைவரும் நெகிழ | மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|---|---|
| 07.04.1979 | 18.04.2006 | 28.07.1980 | 18.04.2006 |

(18.04.2009)

புதுமலராய் பூத்து மண்ணில்
புன்னகைத்த எங்கள் கண்ணா! கமல்!
இருயுகம் போல் இருக்குதடா!
நீங்கள் இருந்த இடம் தவிக்குதடா!
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம்
ஆலமரமாய் இருந்து விட்டு
அவசரமாய் போய் விட்டீர்களே!
இப்பூமியில் இருக்கும்வரை
மறவோம் கண்ணா! கமல்!

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர். (84386)

குடும்பத்தினர்.

## 'ஹம்லெட்' திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.பொது நூலகத்தில் ஷேக்ஸ்பியரின் 'ஹம்லெட்' திரைப்படம் இன்று சனிக்கிழமை முற்கபல்10 மணிக்குக் காண்பிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படக் காட்சியில் ஆர்வலர் அனைவரும் பங்கு பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## நடமாடும் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.18

செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நடமாடும் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி, ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் அன்றைய தினம் உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவிக்கப்படுகின்றது. (204)

## சுதர்சன ஹோமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.18

வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 7 மணியில் இருந்து நண்பகல் 12 மணி வரை சுதர்சன ஹோமம் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நிறைவுபெற்றதும் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (204)


**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (84481)

**வீடு விற்பனைக்கு**

நாவலர் வீதி, கச்சேரி நல்லூர்ச் சந்திக்கு அருகில் கடையுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.


தொடர்பு: 0602214688/0212229119
0775184725
(சி/557957)

**இறைச்சிக்கோழி விற்பனை**

நிறைகூடிய, தரமான புறொயிலர் இறைச் சிக்கோழிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

**செம்மணி பாம்,**
77/3, செம்மணி வீதி,நாயன்மார்கட்டு. (84343)


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 05 | 18 |
| 10 | 04 |
| 1947 | 2004 |

## அமரர் சூசைமுத்து அன்ரனி

விதையிட்டுக் காத்தீரே! விருட்சமாகும் வரை
விருட்சங்கள் தழைத்த போது விலகிப் போனீரே!
ஆண்டுகள் ஐந்தென்ன...
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சத்துள் நிலைத்திருக்கும்.

இல.5, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (84471)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்
29 - 08 - 1938

இறைவன் அடியில்
13 - 03 - 2009

ாய்மையின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
உடன்பிறப்புக்களை உந்தன் அன்புக்கரம்
நீட்டி வானுயர வைத்தீரே
கைப்பிடித்தவரை கலங்கரை விளக்கமாய்
காலம் இருந்தவரை கண்ணுக்குள் வைத்து
கடமை தவறாப் பத்தினியாய்
தன்னுயிரினும் மேலாக போற்றினீரே
தான்பெற்ற பிள்ளைகளிரண்டையும்
கண்மணிபோல் இரவும் , பகலும்
கண்மூடாக் காத்து தரணியில் தாய்க்கு இலக்கணமானீரே
பெற்ற தாயினும் மேலாகப் பேரப்பிள்ளைகளிடம்
அன்பு காட்டினீரே நல்லாசானாய்
நாட்டுக்கு நற்போதனை செய்தீரே

வாழ்வாங்கு வையத்துள் வானமுள்ளவரை
உம் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது

## திருமதி. மகிழ்மலர் மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய ஆசிரியர், கொக்குவில் மேற்கு, கொக்குவில்)

அமரரின் 31ம் நாள் நினைவு தினம் 12-04-2009 ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நினைவுகூரப்பட்டு, இன்று சனிக்கிழமை (18-04-2009) அன்று சங்கமம் Banquet Hall ல் மதியம் 11:00 மணி தொடக்கம் 2:00மணிவரை ஆத்மசாந்திப்பிரார்த்தனையும், மதியபோசனமும் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு : க. மாணிக்கவாசகர் (கணவர்) 905- 201 1626 மகள் 416- 996 8903

## கதிரவேற்பிள்ளை குருபூசை தினப் போட்டிகள்

வடமராட்சி, ஏப்.18

மேலைப்புலோலி சதாவதானி கதிரை வேற்பிள்ளையின் 102 ஆவது குரு பூசை தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டிகள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் கி.குகநாதன் தலைமையில் இடம்பெறும் இப்போட்டியில் ஆண்டு 1 தொடக்கம் 11ஆம் ஆண்டு மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாக பண்ணிசை, மனனம், பேச்சு அவதானம் ஆகிய போட்டிகள் நடத்தப்படும். (50-236)

## வாராந்த ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி, ஏப்.18

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாராந்த ஆன்மீக நிகழ்வு ஆரம்பமாகி 5 வருடங்கள் பூர்த்தியாகி, 6 ஆவது வருடத்தின் முதலாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "வெற்றி விநாயகர்" என்னும் தலைப்பில் சைவப்புலவர் கீழ்க்கரவை எஸ். நவம் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஆன்மீக நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டபோது முதலாவது வாரத்தில் கீழ்க்கரவை நவத்தின் சொற்பொழிவு முதன் முதலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (50-236)

## மூத்த பிரஜைகள் அவை அங்குரார்ப்பண நிகழ்வு

வடமராட்சி , ஏப்.18

வல்வெட்டித்துறை மூத்த பிரஜைகள் அவை அங்குரார்ப்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை மாநகரசபைச் செயலாளர் கு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சமூகநலத் திணைக்கள இணைப்பாளர் ரி.கிருபாகரன், பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். சுரேந்திரா, பருத்தித்துறை பிரதேச செயலக உளவள உதவியாளர் ரி.துஷ்யந்தன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (50-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் மார்கழி இசைவிழா – 2008



இ.குமாரசாமி சர்மா
ஓய்வுபெற்ற உதவித் திட்டப் பணிப்பாளர்.

ஆண்டுதோறும் சென்னை மாநகரம் மார்கழி மாதத்தில் விழாக்கோலம் பூண்டு எங்கும் மக்கள் இசை வெள்ளத்தில் மூழ்குவதனைக் காணக்கூடியதாக உள்ளது. எங்கு பார்த்தாலும் சபாக்கள் அலங்காரமுடன் காட்சி கொடுத்து வெகு உற்சாகமாக இசைக்கலைஞர்களும், இசை ரசிகர்களும் சந்தோசமாக கலந்து கொள்வது மிகவும் சந்தோசமாக உள்ளது. சென்ற மார்கழி இசைவிழா உற்சவம் சென்னையில் பற்பல புதிய சபாக்கள் உருவாக்கப்பட்டு இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தமை இசைப் பிரியர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகவும், செவிக்குப் பெருவிருந்தாகவும் அமைந்தது.

சென்னையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சபாக்களில் இசை நிகழ்ச்சிகள் செய்வதற்கு மிகவும் தரம் வாய்ந்த சிறந்த கலைஞர்களுக்கே முதலிடம் வழங்கப்படும். மாலை நிகழ்ச்சிகள் தான் சிறப்பானதாக சிறந்த புகழ்பூத்த கலைஞர்கள் பங்குகொள்வர். இத்தகைய சபாக்களில் இசை நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு முற்கூட்டியே பருவச்சீட்டுக்கள் விற்பனை ஆகிவிடுகின்றன.

இங்கு சபாக்களில் வாராந்த நாள்களில் பகல், மாலை, இரவு என இசை நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருக்கும். பகல் நிகழ்ச்சிகள் இலவசமாகப் பார்க்கமுடியும். இசைக் கலைஞர்கள் ரசிகர்களை மிகவும் கவரும்வண்ணம் தமது வித்துவத்தன்மையினை வெளிப்படுத்துவர். ரசிகர்களும் அதனை மெய்மறந்து மிகவும் உற்சாகமாக ரசித்து, பாராட்டி, கைதட்டி தமது பாராட்டுதல்களை தெரிவிப்பர். சென்னையில் நடைபெறும் இத்தகைய இசை விழாக்களில் ஆண்டுதோறும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் கீழைத்தேய இலங்கை போன்ற நாடுகளில் இருந்தும் பல தமிழர்கள் தவறாது வருகின்றமை காணக்கூடியதாக உள்ளது.

(தொடரும்....)

## வாரவசந்தம்

# உடல் எப்படி உருவாகின்றது?



மிக சில உயிர்களுக்கு ஒரே செல்தான் உண்டு. அதுவே இரண்டாகப் பிரிந்து கரு உற்பத்தியாகிறது. அண்ட கோசத்திலிருந்து முட்டை வெளியாகி ஆண் அணுவுடன் கலந்து கர்ப்பப் பையில் வந்து சேர்ந்து கரு ஏற்படுகிறது. பெண்ணின் உடம்புக்குள் இருக்கும் ஒவ்வொரு செல் முட்டைக்கும் கோடிக் கணக்கில் செல்களை உற்பத்தி செய்யும் சக்தி உண்டு. ஆண் அணுவு டன் கலந்தவுடன் இந்த சக்தி அதற்குக் கிடைக்கிறது. அத்தனை செல்களும் சேர்ந்து சிசு என்ற புதிய படைப்பு ஒன்றைப் படைக்கிறது. முட்டையும் ஆண் அணுவும் சேர்ந்து உண்டாகும் செல்லுக்கு சைகோட் (Zygote) என்று பெயர். ஒவ்வொரு சைகோட்டும் இரண்டாகி அந்த ஒவ்வொன்றும் இரண்டாகி இப்படியே பிளந்து பெருகிக்கொண்டு போகின்றன. செல்கள் எண்ணிக்கையில் பெருகப் பெருக, ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்தன்மை ஏற்படுகிறது. அந்த செல்களைக் கொண்டுதான் மனித உடம்பின் பல பகுதிகள் அமைகின்றன. ஒவ்வொரு செல்லும் கொஞ்சம் கொஞ்சமாக மனித உடலாக உருப்பெறுகின்றன.

# நோய்களைக் குணப்படுத்தும் நகைகள்




நாம் நகைகளை வெறுமனே அழுக்காகத்தான் அணிகிறோம் என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நகை அணிவது வெறும் அழகுக்காக மட்டும் இல்லை... அதில் மருத்துவ ரீதியான பலன்களும் நமக்குக் கிடைக்கிறது என்கிறார்கள் மருத்துவர்கள்.

நம் உடலின் இரத்த ஓட்டத்தை ஏந்திச் செல்ல குழாய்களும், அதற்கான பாதைகளும் இருப்பதுபோல, நம் உயிர் ஓடும் சக்திக்கு என்று தனிப் பாதைகள் உண்டு. "நாடி ஓட்டப் பாதை" என்று இதற்குப் பெயர். உயிர்ச்சக்தி ஓட்டப்பாதைகள் என்றும் சொல்வோம். நாடிகளும், நரம்புகளும் முக்கிய இடங்களில் ஒன்று சேர்வதை வர்மப் புள்ளிகள் என்கிறோம்.

இந்த மாதிரி புள்ளிகள் இந்தப் பாதைகளில் ஏராளமாக உள்ளன. குறிப்பிட்ட அளவு தூண்டுதலை இந்தப் புள்ளிகளில் ஏற்படுத்துவதன் மூலம் அரிய மருத்துவ சிகிச்சையே நம் உடம்பில் நடைபெறும். இதுதான் அக்குபஞ்சர் என்னும் சீனப் பாரம்பரிய மருத்துவம்! பெயர்தான் இது சீன மருத்துவமே தவிர, உண்மையில் இது தோன்றியது இந்தியாவில்தான். இராமதேவர் என்ற சித்தர்தான் இதை சீனா வரை கொண்டு சேர்த்தவர்.

அங்கு இன்று இந்த மருத்துவத்துக்கு என்று தனிப் பல்கலைக்கழகமே உள்ளது. உலகின் பல இடங்களுக்கும் இதை பரவச் செய்து வருகிறார்கள். இந்த வர்ம புள்ளிகள். கை, கால், மற்றும் உள்ளங்கை, உள்ளங் காலில்தான் அதிகப்படியாக உள்ளதால் இவற்றைத் தூண்டும் விதமாகவே நாம் வெறும் காலால் நடந்து மலைக்கோயிலுக்கு செல்வது, கல்லும் முள்ளும் குத்துவதை காலுக்கு மெத்தை என விருப்பமாக பக்தியுடன் ஏற்றுக்கொள்வது. காது குத்தி தோடு அணிவிப்பதை ஒரு திருவிழாவாகவே கொண்டாடி மகிழ்வது என்று நமது முன்னோர்கள் இந்த அருமையான அக்குபஞ்சர் வைத்தியத்தை நமது வாழ்க்கையுடனே இணைத்துவிட்டார்கள். இதுபோன்ற ஆபரணங்களில் நாம் பெரும்பாலும் தங்கத்தை உபயோகிப்பதற்கும் கூட காரணம் இருக்கிறது. தங்கம் உடம்பைத் தொட்டபடி இருந்தால் நம் உடலின் மெருகு அதிகரித்து அழகு மிளிரும்! நாம் போடுவது தங்கமோ, வெள்ளியோ எதுவாக இருந்தாலும், அந்த ஆபரணம் என்பது நம் உடலின் அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டித்தான் விடுகிறது. அதற்காகவாவது, இனி நாம் நகைகளைப் போடுவோம். இதனால் பல வியாதிகள் கட்டுப்படட்டும்!

# மனிதர்களுக்கு இரையாகும் பவளப்பாறைகள்



உலகம் முழுவதிலும் ஆச்சரியமான வடிவங்களிலும், அளவுகளிலும், நிறங்களிலும் 350க்கும் மேற்பட்ட வெவ்வேறு பவள வகைகள் உள்ளன. நீருக்கடியில் உள்ள இக்காடு நுண்ணோக்கியில் மட்டுமே காணக்கூடிய தாவரங்களைக் கொண்டது. விலங்குகள் முதல் திருக்கைகள், கடலாமைகள், சுறாக்கள் என்பன இப்பகுதி எங்கும் நிறைந்துள்ளன. உயிர்ப் பல்வகைமை நிறைந்த இப்பாறைகள் இன்று அழியும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

புளோரிடாவிலிருந்து தென்னமெரிக்கா வரை உள்ள கரீபியன் பகுதிகளில் பவளப்பாறைகள் வெகுவாக அழிந்துவிட்டன என கண்டறியப்பட்டுள்ளது. 1970களில் 60 சதவீத பாறைகளை மூடியிருந்த பவளங்கள் தற்போது 10 சதவீதமே உள்ளன. உலகிலுள்ள 10 சதவீத பாறைகள் கரீபியாவிலுள்ள 10,000 சதுரமைல் பரப்பளவில்தான் உள்ளது. இந்தப் பாறைகள் ஆரோக்கியமற்றவையாக உள்ளதால் இவற்றில் 10 சதவீதமே பவளங்களால் மூடப்பட்டுள்ளன. பெரும்பாலான பாறைகள் இறந்த பவளங்களையே கொண்டுள்ளன.

இவை மனிதர்களால் பலவிதமான ஆபத்துக்கு உள்ளாகின்றன. மீன்கள் உட்கொள்ளும் சிலவகை தேவையற்ற கடல் தாவரங்கள் மீன்பிடித்தொழில் காரணமாக அதிகரித்துவிட்டன. இத்தாவரங்கள் பவளங்களிற்கு போட்டியாக பாறைகளில் வளர்வதால் பவளங்களின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

கடல்நீர் மாசடைவதாலும், வெப்பமடைவதாலும் பவளங்கள் இறந்துவிடுகின்றன. 1998இல் உலகிலுள்ள 10 சதவீத பாறைகள் நீரின் வெப்பத்தால் அழிந்துவிட்டன. விவசாயக் கழிவுகள், சூக்கடை நீர் கலத்தல் போன்ற சுற்றுப்புற மாறுபாட்டாலும் பவளங்கள் அழிந்து வருகின்றன.

25 வருடங்களாக ஜமைகா, புளோரிடா, பஹாமாஸ் ஆகிய இடங்களில் ஆராய்ச்சி நடத்திய ஆராய்ச்சியாளர்கள் மெக்சிக்கோ, மத்திய தென்அமெரிக்கா நாடுகளில் அமோனியா கழிவுகள் கரீபியன் கடல் பாறைகளை அழிவடையச் செய்கின்றன.

செல்வி கூரேஷியா சந்திரசேகரம் B.A.(Hons),
புவியியல் சிறப்புக்கலை.

# முண்டும் சுவடுகள்

ந.சத்தியபாலன்

சிவம் கடையில் வழமைபோல்கூட்டம் நிரம்பிவழிந்தது. மேசையின் முன்னால் அமர்ந்து சிப்பந்திகளை ஏவிக்கொண்டிருந்தார் சிவம்.

அரைமணி நேரத்துக்குப் பின்னர்தான் எனக்கான பொருளை வாங்கமுடிந்தது. துரிதமாகச் சரை கட்டப்பட்டு முன்மேசையில் குவிக்கப்பட்டவற்றைப் பார்த்தபடி நின்ற எனது மூளையில் ஒரு விஷயம் உறைத்தது. சரை கட்டப் பயன்படுத்தப்படும் கடதாசி 'புதிசு' மங்காத இடையிடை அழகான படங்களுடன் காணப்பட்டது. என்ன பேப்பராக இருக்கும் என்று யோசித்தபடி நிற்கையில் என் அருகில் நின்றவர் தனக்கான பொருள்களைப் பையில் இட்டுக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

"நம்மரசளிக்கும் நன்கொடை இந்நூல்" என்ற வாசகம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது; அந்தப் பெரிய சரையில். பாடசாலைகளில் உபயோகிக்கப்படாத புத்தகங்கள் – இலவச நூல்கள் – கடைகளுக்கு நிறுவையில் வழங்கப்படுவது நானும் அறிந்த விஷயம்தான். கடதாசி புதிதாயிருக்கிறதே என்று யோசித்தேன் – என் பின்னே ரமேஷ் மாஸ்ரர் நின்றுகொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை. "என்ன பாப அண்ணை யோசிக்கிறியள். என்னடா பள்ளிக்கூடப் புத்தகத்தில் சரை கட்டியிருக்கே எண்டு குழம்புறியளோ? பள்ளிக்கூடங்களில பாவிச்சு முடிஞ்ச புத்தகங்கள், அதிக அளவில் கிழிஞ்சுபோன புத்தகங்கள் கடையளுக்குத் தான் குடுபடுகிறது"

"அது சரிதம்பி, புத்தகம் புதுசாய் இருக்கே அதுதான் யோசிச்சனான்" அடிக்கடி 'சிலபஸ்' மாறுகிறதால புத்தகம் புதுசாய் இருந்தாலும் பிரயோசனப்படாது"

"எண்டாலும் தம்பி இப்பெல்லாம் புத்தகங்களின்ர மரியாதை கெட்டுப்போச்சு. எங்கட காலத்தில வருசம் முடிஞ்சு புதுவருடப்பிறப்ப துவங்க முன்னம், முதல் வகுப்புப் பிள்ளையளிட்ட அடுத்த முறைப் புத்தகங்களை எனக்குத் தாங்கோ எண்டு முன்னுக்கே சொல்லி வைச்சு எல்லோ புத்தகம் வாங்கிறனாங்கள். எனக்குப் இப்பெண்டாப் போல கிடக்கு. நான் ஓ.எல். படிக்கக்குள்ள நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் எண்டு ஒரு சரித்திரப் புத்தகம் கடைகளில் இல்ல. இரவல் வாங்கவும் முடியேல்ல. புத்தகம் இல்லாமல் சரித்திர பாடத்துக்கு அருளம்பலம் மாஸ்ரரிட்ட பட்டபாடு சொல்லிமாளாது"

எங்கள் அருகில் நின்றுகொண்டிருந்த சந்திரலிங்கம் "அதுதானே அண்ணை! அந்தக் காலத்தில புத்தகத்துக்கு ஒரு மதிப்ப இருந்தது. கிழிக்கக் கூடாது, கிறுக்கக் கூடாது. உறைபோட்டுப் பத்திரமாப் பாவிக்கவேணுமெண்டு எங்கட தமிழ் மிஸ், பூங்கோதை ரீச்சர் சொல்லுறவா. புத்தகம் கீழே விழுந்தால் தொட்டுக் கும்பிட்டுத்தான் வச்சிருப்பம். ஒருநாள் என்ர புத்தகத்தைத் தற்செயலாக மிதிச்சுப் போட்டுத் தொட்டுக் கும்பிடமாட்டனெண்டு நிண்ட நித்தியானந்தத்துக்கு நான் துரத்தித் துரத்தி அடிச்சிருக்கிறன்"

"எதையும் இலவசமாகக் குடுத்தால் மதிப்ப இறங்கித்தான் போகும். அண்டைக்கொரு நாள் ஒரு வீட்டில பாத்தால் முறிஞ்ச கதிரையொண்டுக்கு நாலு புத்தகத்தை 'முண்டு' குடுத்து வச்சிருக்க ஏனெண்டு கேட்டதுக்கு, ஓ.எல் படிச்சு முடித்த பெடியனின்ர புத்தகங்களாம். இதுக்கெண்டாலும் பிரயோசனப்பட்டுமே எண்டு தேப்பன் ஜோக் அடிக் [illegible]

[illegible] கிடக்கு' என்று இறங்கி நடந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் உருவாகியுள்ள மோசமான சூழலால் உயிருக்கு ஆபத்தான நிலையில் பொதுமக்கள்

## அமெரிக்க அரசு ஆழ்ந்த கவலை

வாஷிங்ரன், ஏப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெறும் போரினால் உருவாக்கப்பட்டுள்ள மோசமான நிலைமைகளுக்கு மத்தியில் வசிக்கும் மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள உயிருக்கு ஆபத்தான நிலைமையையிட்டு அமெரிக்கா ஆழ்ந்த கவலையடைவதாக அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களப் பதில் பேச் சாளர் தெரிவித்திருக்கின்றார்.

போர்ப் பகுதியில் உள்ள ஒரு லட்சத்து 40 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான முறையில் வெளியேறும் வரையில் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் சிறிலங்கா அரசாங்கத்தையும் இராணுவத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அமெரிக்கா வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள்த்தின் பதில் பேச்சாளர் றொபோர்ட் வூட் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வாஷிங்ரனில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:

''போரில் சம்பந்தப்பட்டுள்ள இரண்டு தரப்பினரும், மனிதாபிமான அடிப்படை யிலான போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன டியாக முன்வரவேண்டும். மற்றும் போரின் பிடியில் சிக்கியுள்ள பொது மக்களின் சுதந்திரமான நடமாடும் உரி மையை மதிக்க வேண்டும்.

தமிழ்ப் பொதுமக்களுக்கு உதவும் வகையில் பாது காப்பு வலயம் மீதான எறிகணைத் தாக்குதல்களை நிறுத் துமாறும், மக்களுடைய பாதுகாப்பான வெளியேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்துலக கண்காணிப்பாளர்களை அனுமதிக்குமாறும் சிறிலங்கா அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுக்கொள்கின்றது.

இடம்பெயர்ந்தவர்களுக்காக அமைக் கப் பட்டுள்ள முகாம்களில் அனைத்துலக மனிதாபிமான தராதரங்களைப் பேணுமாறும் அவற்றுக்கு செல்வதற்கு அனைத்துலக உதவி நிறுவனங்களுக்கும் அனைத்துலகக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஊடகத் துறையினருக்கும் அனுமதி வழங்குமாறும் சிறிலங்கா அரசாங்கத்தைஅமெரிக்கா கேட்டுக் கொள்கின்றது.

நீண்டகாலமாகத் தொடரும் இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான வாய்ப்பு ஒரு சட் டப்பூர்வமானஇறைமையுள்ள அரசாங்கம் என்ற முறையில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

அனைத்துச் சமூகங்களினதும் நியாய பூர்வமான விருப்பங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும் இறுதியானதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண முடியும்.

கொலைகள் மேலும் தொடர்வதும் குறிப்பாக பொதுமக்கள் கொல்லப்படுவது இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வராது. அத்துடன் சமாதான முயற்சிகளுக்கும் அது தடையாகவே இருக்கும்.

இந்தப் பிரச்சினைக்கு சமாதான வழிமுறைகளிலான ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு இராஜதந்தி ரத்தைப் பயன் படுத்துமாறு சிறிலங்கா அரசாங் கத்தை நாம் கேட் டுக் கொள்கின்றோம்.

இன்றைய நிலையில் வன்முறைகளை விரும்பாது அதிகாரப் பரவ லாக் கலை நாடிநிற்கும் தமிழர்களுக்காக தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்குமாறும் சிறிலங்கா அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலைப் பணியாளர்
திருமதி லலிதா சங்கரநாதனின் அன்புத் தந்தையார்

### முருகன் சின்னராசா

அவர்கள் 17.04.2009 இல் சிவபதமடைந்த செய்தி கேட்டு அவர் களின் பிரிவால் துயருற்றிருக்கும்குடும்பத்தினருக்குஎமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுள்வேத
வைத்தியசாலை, கைதடி.

வைத்தியசாலைச் சமூகம்.



நயினாதீவு ஸ்ரீகணேச சனசமூகநிலைய வளர்ச்சி நிதிக்காக
புதுவருடத்தையொட்டி நடத்திய
அதிர்ஷ்ட லாபச் சீட்டின் வெற்றி இலக்கங்கள்

முதலாம் பரிசு – கலர் ரீ.வி – 1142
இரண்டாம் பரிசு – துவிச்சக்கரவண்டி – 1499
மூன்றாம் பரிசு – டிஸ் அன்ரனா – 1625

10 ஆறுதல் பரிசுகளான கைத்தொலைபேசியைப் பெறும் அதிர்ஷ்ட இலக்கங்கள்
(997, 1189, 1780, 2723, 2439, 162, 1856, 934, 2384, 2337)

வெற்றி இலக்கங்களுக்குரியவர்கள் நிலைய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.
உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி

5ஆம் வட்டாரம்
நயினாதீவு

ஸ்ரீகணேச சனசமூகநிலையம்.

(84485)



RED CROSS SRI LANKA SOCIETY

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- யாழ்கிளை
வலி.மேற்கு பிரிவு (சங்கானை)

புற்றுநோயாளர்களுக்கான நிதியை மேம்படுத்துவதற்காக 19.04.2009 (ஞாயிறு) அன்று யா/வட்டு மத்திய கல்லூரியில் நிகழவிருந்த கலைவிழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு, எதிர்வரும் 10.05.2009 (ஞாயிறு) அதே கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தி.உதயசூரியன் (ஜே.பி)
கௌரவ தலைவர்.

(84492)

கே.வரதராஜா
கௌரவ செயலாளர்.



## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



### அமரர்
### சின்னத்தம்பி இலட்சுமி

19.01.2009 அன்று அமரத்துவமடைந்த எம் குடும்ப விளக்கின் துக்க நிகழ்வுகளில் கலந்துகொண்டு துயரில் பங்கேற்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவிப்பதுடன் 19.04.2009 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் நினைவாக காலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். சபிண்டீகரண கிரியைகளிலும் அதன் பின் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரையும் நேரடியாகச் சந்தித்து அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

யாக்கரு வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
(தந்தம்பன்-அம்மன்)
நெல்லியடி.


## ஆசிரியர் கலாசாலை இறுதிப்பரீட்சை முடிவுகள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கடந்த வருட 2 ஆம் வருட இறுதிப் பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்ததுடன் அவர்களுக்குரிய பெறுபேறுகளை கலாசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (204)


## தேவை

பொமேறியன் ஆண் நாய்க்குட்டி யொன்று தேவை. மிகக் குறைந்த வயதுடையவை மட்டும் விரும்பப்படும்.

தொடர்பு:0718175819



## தவறிவிட்டது

பாடசாலை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த தே.தேவசுதர்சிஷினி என்பவரது H.G-0142 இலக்கமுடைய மோட்டார் வாகனப் பத்திரங்கள் அனைத்தும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே: 0779582310



## வேல் மிக்சர் விற்பனை நிலையத்தில்

ஒடியல் கூழ் சனி, ஞாயிறு, புதன் கிழமைகளில் மு.ப. 11 மணி தொடக்கம் மாலைவரை விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் ஆட்டுக்கால் சூப், கோழி சூப் என்பன அருந்தி மகிழலாம்.

இல: 57, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்
(பூனாறி மரத்தடிக்கும், கொக்குவில் சந்திக்கும் இடையில்)
T.P.NO : 0776701461



## Hatton National Bank

### அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 29.02. 2008 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப் படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக் கையாளரின் அடகு நகைகள் 25.04.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு

ஹற்றன் நஷனல் வங்கி



## மரண அறிவித்தல்

### செல்லையா சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற வைத்தியசாலை உத்தியோகத்தர்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் 14.04.2009 செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- மாணிக்கம் தம்பதியினரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- உத்தமிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், வள்ளிநாயகி அம்பாளின் அன்புக் கணவரும், தவசீலன்(இத்தாலி), அனுஷா(கொழும்பு), ஜிந்துஷா, தனசீலன், சுதர்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவதாசனின் (கனடா) அன்பு மாமனாரும் தியாகராசா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மல்லிகாதேவி, கனகராசா, நீலாம்பிகை, காலஞ்சென்ற இராசரெத்தினம் மற்றும் நவரெத்தினம், செல்வரெத்தினம், வேதநாயகி அம்பாள், சுந்தரலிங்கம், தெய்வநாயகி அம்பாள், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் இராசலிங்கம், காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புமைத்துனரும், நடராசா சிவனம்மா, இந்திராணி, சிவபாக்கியம், அன்னலெட்சுமி, பூலோகசிங்கம், பாக்கியலெட்சுமி, காலஞ்சென்ற நடராசா மற்றும் நேசமலர், காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் பாசமிகு சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2009 திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(84484)

குடும்பத்தினர்.



## சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை குருபூசைத் தினப்போட்டி -2009

நேரசூசி 18.04.2009 சனி

| நேரம் | பேச்சு | மனனம் | பண்ணிசை | அவதானம் |
|---|---|---|---|---|
| 09.00 மணி | பாலர் கீழ்ப்பிரிவு | பாலர் மேற்பிரிவு | தரம் 7 பிரிவு<br>தரம் 4 பிரிவு | |
| 10.00 மணி | பாலர் மேற்பிரிவு | பாலர் கீழ்ப்பிரிவு | தரம் 5 பிரிவு | தரம் 6-8 பிரிவு<br>தரம் 9-11 பிரிவு |
| 11.00 மணி | தரம் 4பிரிவு, மத்திய பிரிவு | தரம் 3 பிரிவு, மேற்பிரிவு | தரம் 6 பிரிவு | |
| 12.00 மணி | மேற்பிரிவு | மத்திய பிரிவு | | |

19.04.2009 ஞாயிறு

| நேரம் | பேச்சு | மனனம் | பொது அறிவு |
|---|---|---|---|
| 09.00 மணி | தரம் 1 பிரிவு, தரம் 3பிரிவு | தரம் 2 பிரிவு, தரம் 5 பிரிவு | தரம் 6-8 பிரிவு, தரம் 9-11 பிரிவு |
| 10.00 மணி | தரம் 5பிரிவு, தரம் 7 பிரிவு | தரம் 6 பிரிவு, தரம் 1 பிரிவு | |
| 11.00 மணி | தரம் 2பிரிவு, தரம் 6 பிரிவு | தரம் 4பிரிவு, தரம்7 பிரிவு | |

* போட்டியாளர்கள் போட்டி ஆரம்பமாகும் நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்பாக சமுகமளித்தல் வேண்டும்.
* போட்டியாளர்கள் கோல உடையணிந்து போட்டிகளில் கலந்துகொள்வது சிறப்பானதாகும்.
* அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் போட்டி தொடங்க முன்னர் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை ச.ச.நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் பூகம்பம்!! 22 பேர் பலி! வீடுகள் சேதம்

காபூல், ஏப். 18

கிழக்கு ஆப்கானிஸ்தானை நேற்று வெள்ளிக்கிழமை இரு மிதமான பூகம்பங்கள் தாக்கின. பூகம்ப அனர்த்தங்களுக்கு 22 பேர் பலியாயினர். இருநூறுக்கு மேற்பட்ட வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன என அதிகாரிகள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள்.

நேற்று வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி காலை 10.27 மணிக்கு முதல் பூகம்பம் உலுக்கியது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.5 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இரு மணித்தியாலங்களுக்குப் பின்னர் இரண்டாவது பூகம்பம் உலுக்கியது. இதன் வீச்சு 5.1 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இவ்விரு பூகம்பங்களும் ஆப்கானின் நங்கர்ஹார் மாகாணத்தில் ஏற்பட்டன. தலைநகரான காபூலிலிருந்து கிழக்கே 50 மைல் (80 கிலோ மீற்றர்) தொலைவில் இம்மாகாணம் அமைந்துள்ளது. இது பாகிஸ்தான் எல்லைக் கருகிலுள்ள ஒரு மாகாணமாகும் என அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டார்கள்.

இப்பூகம்ப அனர்த்தங்களால் நான்கு கிராமங்கள் படுமோசமாக சேதமடைந்துள்ளன. 30 பேர் வரை காயமடைந்துள்ளனர். கட்டட இடிபாடுகளிலிருந்து மீட்புப் பணியினர் பல சடலங்களை மீட்டுள்ளனர் என மாகாண அதிகாரி, ஜலலாபாத்தில் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

மீட்புப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் அவர் கூறினார். பேரிடர் முகாமைத்துவ அதிகாரி அஹ்மத் ஷேகிப் ஹம்ராஸ் குறிப்பிடுகையில்,

" ஷோர்ஹாத் மாவட்டத்திலிருந்து 45 கிலோமீற்றர் (28 மைல்) தொலைவில் முதல் பூகம்பம் மையங்கொண்டிருந்தது." என ஏ.எவ்.பி.செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

மிர் ஹாட் ஹெல் கிராமத்தில் அநேக வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. இடிபாடுகளுக்குளிருந்து சடலங்கள் மீட்கப்படுகின்றன. மீட்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என உள்ளூர் ரொய்ட்டர் நிருபர் தெரிவித்தார்.

"எனது குடும்ப அங்கத்தவர்களில் மூவர் கொல்லப்பட்டனர். ஏழு பேர் காயமடைந்தனர். வீடு தகர்ந்துவிட்டது." என கிராமவாசியான குல் மொஹம்மத், பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

"எங்கள் கிராமத்தைப் பொறுத்தமட்டில், 40 பேர் வரை பலியாகியுள்ளனர். நூற்றுக் கணக்கான வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன" என்றும் அவர் கூறினார்.

இந்தப் பூகம்பங்கள் பின்தங்கிய மலைப் பிரதேசங்களிலேயே இடம்பெற்றுள்ளன. ஆங்காங்கு மண் சரிவுகள் ஏற்பட்டு, பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளன என உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இந்தோனேஷியாவில் பூகம்பம்

ஜகார்த்தா,ஏப்.18

இந்தோனேஷியாவின் சுமாத்திராதீவில் வியாழக்கிழமை அதிகாலை மிதமான நில நடுக்கம் ஏற்பட்டது.இதன் தாக்கம் ரிச்டர் அளவில் 6.1 புள்ளிகளாக பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமாத்திராவின் பெங்குலு பகுதியிலிருந்து 210 கி.மீ.தொலைவில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் பூமிக்கடியில்,8.5 கிலோ மீற்றர்ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என கூறப்பட்டுள்ளது.

அந்த நாட்டு நேரப்படி வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

## ஈராக்கிய இராணுவத் தளத்தில் நேற்று தற்கொலைத் தாக்குதல்; 23பேர் காயம்

பக்தாத்,ஏப்.18

ஈராக்கிய அன்பார் மாகாணத்திலுள்ள ஹபனியா நகர இராணுவத்தளத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில்,26 பேர் காயமடைந்தனர்.எனினும், உயிரிழப்புகள் நேரவில்லை என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஹபனியா இராணுவத்தளத்தில் ஈராக்கிய படைகளும்,அமெரிக்கப்படைகளும் உள்ளன. அன்பார் மாகாண தலைநகரான ரமேதியின் கிழக்கே,25 கிலோ மீற்றர்(15 மைல்) தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கிர்குக் என்னுமிடத்தை நோக்கி பொலிஸார் பயணித்த வாகன அணியொன்று புதன் கிழமை, கார்க்குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானது.இதில் 11 பொலிஸார் கொல்லப்பட்டனர்.இவர்கள் வட ஈராக்கிலுள்ள எண்ணெய் நிலையங்களுக்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதற்காக சென்று கொண்டிருந்தவர்களாவர்.

தென் பக்தாத்தில்,சனிக்கிழமை சுனி தீவிரவாதக் குழுவொன்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இக்குழுவினர் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து, மீள சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டு வருபவர்களாவர்.

இஸ்கந்தியா என்னுமிடத்திலுள்ள இராணுவத் தளமொன்றில்,தங்களுக்கான வேதனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக,இவர்கள் காத்துக் கொண்டிருந்த சமயம், இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது.




## மஞ்சள் ஷேர்ட் அமைப்பின் தலைவர் மீது தாய்லாந்தில் துப்பாக்கிப் பிரயோகம்!

பாங்கொக்,ஏப்.18

தாய்லாந்தின் ஜனநாயகத்துக்கான மக்கள் கூட்டமைப்பின் தலைவர் சொன்டி லிம் தோங்குல், துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டார். இக் கூட்டமைப்பு மஞ்சள் ஷேர்ட் அமைப்பு என அழைக்கப்படுகிறது.

இதன் உறுப்பினர்கள் மஞ்சள் ஷேர்ட் அணிந்தே ஆர்ப்பாட்டத்திலும், போராட்டத்திலும் ஈடுபடுவார்கள். கடந்த ஆண்டு, அப்போதைய பிரதமர் தக்சின் சின வத்ராவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இக் கவிழ்ப்புக்கு இந்த அமைப்பே பெரும் பங்காற்றியுள்ளது.

சொன்டி லிம் தோங்குல், தமது காரில் பயணித்துக் கொண்டிருந்த சமயம், இவரது காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. எனினும் இதில் இவர் சிறு காயங்களுடன் தப்பிவிட்டார். இவரது கார்ச் சாரதி படுகாயமடைந்தார். இவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சொன்டி லிம் தோங்குல் நேற்று வெள்ளிக் கிழமை, நிகழ்ச்சியொன்றை பதிவு செய்வதற்காக தொலைக்காட்சி நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சிவப்புஷேர்ட் கூட்டமைப்பு முன்னாள் பிரதமர் தக்சின் சின வத்ராவுக்கு ஆதரவளிக்கும் அமைப்பு. இது சிவப்பு ஷேர்ட் இயக்கம் என அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் சிவப்புச் சட்டை அணிபவர்கள்.

தக்சின் சின வத்ராவுக்கு ஆதரவான சிவப்புச் சட்டை அமைப்பு கடந்த வாரம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவந்துள்ளது. தலைநகரான பாங்கொக்கில் ஆரம்பமான ஆசியான் மாநாடும், இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் போராட்டத்தால் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

தற்போதைய பிரதமர் அஜித் விஜே ஜீவா பதவி துறக்க வேண்டுமென்றும், புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் விடுத்து இவர்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்களால் இந்த ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை கைவிடப்பட்டது.

வெளிநாட்டில் அஞ்ஞாதவாசமிருந்து வரும் முன்னாள் பிரதமர் தக்சின் சின வத்ரா, அங்கிருந்தவாறே [illegible] தமது ஆதரவாளர்களை அரசுக்கு எதி[illegible] முடுக்கிவந்தார். இதையொட்டி அவரது கடவுச் சீட்டு உட்பட பல பயண ஆவணங்களை தாய்லாந்து அரசு இரத்துச் செய்துள்ளது.

## புதிய திருமணச் சட்டத்தை ஆட்சேபித்து ஆப்கானிஸ்தானில் பெண்கள் போராட்டம்

காபூல், ஏப். 18

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய திருமணச் சட்டத்துக்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்து, நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் தலைநகரான காபூலில் போராட்டம் நடத்தினார்கள். இவர்களுக்குப் போட்டியாக ஆண்களும் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள்.

ஒவ்வொரு 4 நாள்களுக்கும் ஒருமுறை மனைவியானவள் கணவனின் ஆசைக்கு இணங்கவேண்டும். உடல் நலம் குன்றியிருந்தாலோ, காயமடைந்திருந்தாலோ விதி விலக்களிக்கப்படும் என புதிய சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனைவி எப்போதும் என்ன காரணத்துக்காகவும் வீட்டை விட்டு, வெளியே தனியாகப் போகலாம் என்பது குறித்தும் இப்புதிய சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட் டுள்ளது.

இச்சட்டத்துக்கு ஆப்கானிஸ்தானில் பெண்கள் பரவலாக ஆட்சேபனை தெரிவித்து வருகிறார்கள். இச்சட்டம் கணவனின் பலாத்கார உடலுறவுக்கு அங்கீகாரம் அளிக்கிறது. இச்சட்டத்தில் மனைவியர் பெண்களாக மதிக்கப்படவில்லை. இயந்திரங்களாக மதிக்கப்படுகிறார்கள் என்றும் பெண்கள் ஆட்சேப குரலெழுப்பி வருகிறார்கள்.

தலைநகரான காபூலில் வியாழக்கிழமை பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்குப் போட்டியாக, இச்சட்டத்தை ஆதரித்து ஆண்களும் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள். எதிரும் புதிருமான இப்போட்டிகளால் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே மோதல் மூண்டது.

சில ஆண்கள் பெண்களை நோக்கி கற்களை எறிந்தார்கள். கிறிஸ்தவர்களின் அடிமைகள் ஒழிக என்றும் கோஷமெழுப்பினார்கள். இதையடுத்து பொலிஸார் இரு தரப்பு போராட்டங்களையும் தடுத்து, கலைந்து செல்லுமாறு இரு சாராரையும் கேட்டுக்கொண்டனர்.

இதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து, இச்சட்டம் நடை முறைப் படுத்தப்பட மாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

## பாகிஸ்தானின் நிபந்தனையற்ற கடன் கோரிக்கை; அமெ. நிராகரிப்பு

வாஷிங்ரன்,ஏப்.18

பாகிஸ்தான் முன்வைத்த நிபந்தனையற்ற நிதியுதவிக் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்து விட்டது. நிபந்தனையோடு கூடிய நிதியுதவியை மாத்திரமே, அமெரிக்கா விடமிருந்து பாகிஸ்தானால் எதிர்பார்க்க முடியும் என இதுகுறித்து அமெரிக்க வெளிநாட்டு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா,1 இலட்சத்து, 12 ஆயிரத்து,500 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு எடுக்கும் காத்திரமான நடவடிக்கைகளைப் பொறுத்தே இந்நிதியுதவியும் அளிக்கப்படும் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 5 ஆண்டு காலத்தில் அந்நாட்டுக்கு அமெரிக்கா 1இலட்சத்து 12 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதியுதவி அளிக்கவிருக்கிறது.இதில் 15 ஆயிரம் கோடி ரூபாய் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தான் இராணுவத்திற்கு வழங்கப் படவுள்ளது.

இந்த நிதியுதவியை வழங்கும் அமெரிக்கா, பாகிஸ்தானில் வேரூன்றியுள்ள தலிபான், அல்-குவைதா தீவிரவாதிகளை அடியோடு ஒழிக்கவேண்டும் என பாகிஸ்தானுக்கு நிபந்தனை விதித்துள்ளது. அதேவேளை பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளின் பாதுகாப்பு முகாம்களும், பயிற்சி முகாம்களும் அழிக்கப்படவேண்டும் என்றும் அது நிபந்தனை விதித்துள்ளது.

பாகிஸ்தானிலுள்ள ஸ்வாட் பகுதியில் இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அங்கிகாரம் அளிக்கும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டதற்கும் அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்தது.தன்எதிர்ப்பையும் அது வெளிப்படையாக தெரிவித்தது. இஸ்லாமிய சட்டம், ஜனநாயகத்துக்கும்,மனித உரிமைகளுக்கும் எதிரானது என்றும் அமெரிக்கா விளக்கியது.

இந்நிலையில், அமெரிக்கா அளிக்கும் உதவிக்கு நிபந்தனை விதிக்கக்கூடாது என்றும் நிபந்தனையின்றி நிதி உதவி அளிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் கேட்டுக் கொண்டது. இதற்கு அமெரிக்கா தற்போது மறுப்பு தெரிவித்து விட்டது.

இதுதொடர்பாக அமெரிக்க வெளிநாட்டு அதிகாரி ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"அமெரிக்காவில் வரிசெலுத்துபவர்கள் ஒரு நாட்டுக்கு உதவி அளிக்கும்போது, தாங்கள் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற மதிப்பு கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். தாங்கள் அக்கறை கொண்டுள்ள சில விஷயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர்."

## உள்நாட்டு உற்பத்தி சீனாவில் கடும் சரிவு

பீஜிங்,ஏப்.18

சீனாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 2009ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 6.1 சதவீதமாக சரிந்துள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டில் இந்த விகிதம் 6.8 சதவீதமாக இருந்தது.

நடப்பாண்டின் முதல் 3 மாதங்களில் ஏற்றுமதி துறையில் காணப்பட்ட கடும் சரிவே ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் சரிந்ததற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

எனினும்,சீனா அரசு அறிவித்த 585 பில்லியன் டொலர் நிதியுதவியின் காரணமாக உள்நாட்டு உற்பத்தி விகிதம் மேலும் சரிவது தடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன தேசிய புள்ளியியல் அமைப்பின் செய்தித் தொடர்பாளர், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம் ஆக்கபூர்வமான மாற்றத்தை சந்தித்து வருகிறது என்றும் எதிர்பார்த்ததை விட சிறப்பாக செயற்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

நடப்பாண்டின் முதல் கா[illegible]ண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி [illegible] சதவீதமாக இருக்கும் என சீனா கணித்திருந்த நிலையில்,அது 6.1 சதவீதமாக சரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விமானத்தில் பயணித்த பெண் மீது சிறுநீர் பாய்ச்சியவருக்கு சிறை

வாஷிங்ரன், ஏப்.18

விமானத்தில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணொருவர் மீது சிறுநீர் கழித்தஜெரோம் கென்னத் கிங் ஜியோ என்ற 28 வயது நபருக்கு மூன்று வாரகால சிறைத்தண் டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்காவிலுள்ள ஹவாய் தீவைச் சேர்ந்த 66 வயதான பெண்ணொருவர், லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு தனது விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்தார். பின்னர் அங்கிருந்து விமானமொன்றில் ஹானலுலு நகருக்கு திரும்பிக்கொண்டிருந்தார்.

அப்பெண்ணருகே, 28 வயது நபரான ஜெரோம் கென்னத் கிங்ஜியோ அமர்ந்திருந்தார். இவர் வடக்கு மரியானா தீவைச் சேர்ந்தவர். இரவு நேரத்தில், விமானத்தில் காட்டப்பட்ட சினிமாவை அப்பெண் மிக ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்த சமயம், கிங்ஜியோ எழுந்து நின்று அவர் மீது சிறுநீர் கழித்துள்ளார்.


அப்பெண் போட்ட கூச்சலைக் கேட்டு ஓடி வந்த விமானச் சிப்பந்திகள் நிலைமையைப் புரிந்துகொண்டனர். இதையடுத்து கிங்ஜியோவை குளியல் அறைக்கு அழைத்துச் சென்று சுத்தம் செய்தார்கள்.

கிங் ஜியோ அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்தார். அதனால் அவர் நிலை தடுமாறியிருந்தார். அத்துடன், மனதளவிலும் பாதிக்கப்பட்டிருந்தார்.

விமானம் ஹான லுலுவில் தரையிறங்கியதும் கிங் ஜியோ கைதுசெய்யப்பட்டார். விமானத்தில் முறைகேடாகவும், சக பிரயாணிக்கு இடைஞ்சலாகவும் செயற்பட்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டி, இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றம் விசாரணையின் முடிவில் இந்நபருக்கு மூன்று வார கால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி ஈழத்துக்கு அ.தி.மு.க. ஆதரவு!



சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டத்தின்போது...

## தேர்தல் அறிக்கையில் தெளிவுபட விளக்கம்

சென்னை, ஏப். 18

**இலங்கை இனப் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணாவிட்டால் தனி ஈழ மாநிலம் அமைய அ.தி.மு.க. வலியுறுத்தும். பெரும்பான்மை சிங்கள இனத்தவருக்கு சமமாக தமிழ் மக்கள் நடத்தப்பட வேண்டும். தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், அவர்களுக்கு நிர்வாக அதிகாரத்தை வழங்க வேண்டும். இந்த முயற்சி தோல்வி அடைந்தால், தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ ஏதுவாக, தனி ஈழம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**- இவ்வாறு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

மேலும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ள அழைப்பு விடுப்பதோடு மட்டுமல்லாமல், அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான படுகொலையை நிறுத்தவும் உடனடியாகக் கோரிக்கை வைக்கப்படும். பெரும்பான்மை சிங்கள இனத்தவருக்கு சமமாக தமிழ் மக்கள் நடத்தப்பட வேண்டும். தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், அவர்களுக்கு நிர்வாக அதிகாரத்தை வழங்க வேண்டும். இந்த முயற்சி தோல்வி அடைந்தால், தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ ஏதுவாக, தனி ஈழ மாநிலம் அமைக்க வலியுறுத்தப்படும். அதிகார மாற்றம் ஏற்பட்ட பின்னர் தமிழ்ப் பகுதிகளைப் புதுப்பிக்கவும், மேம்படுத்தவும் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் ரூபா 10 ஆயிரம் கோடி மானியம் வழங்கப்படும்.

கச்சத்தீவு சம்பந்தமாக இந்திய - இலங்கை உடன்பாட்டை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். தென்னிந்தியாவில் உள்ள மீனவ சமுதாயத்தின் பிரச்சினைகளைப் போக்க ஏதுவாக இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்கத் தேவையான அனைத்தும் செய்யப்படும் - என்றுள்ளது.

## 5 ஆவது நாளாக நீடிக்கிறது உண்ணாவிரதம் 3 பெண்களின் உடல்நிலை மோசமாகப் பாதிப்பு

சென்னை, ஏப்.18

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, சென்னையில் பெண்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 5 ஆவது நாளாகவும் நீடித்தது. இதில், 3 பெண்களின் உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இனப்படுகொலை செய்யப்படும் அப்பாவித் தமிழர்களைக் காக்க கோரி சென்னையிலுள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகத்தில் 20 பெண்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட தொடங்கினர். இதற்கு ஆதரவு தெரிவித்து 100க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று வருகின்றனர்.

போராட்டம் தொடங்கி நேற்றுடன் 5 நாட்கள் ஆகிவிட்டது. இதனால், உண்ணாவிரதம் இருந்து வரும் 20 பெண்களும் சோர்வாகக் காணப்பட்டனர். இதில், சென்னையைச் சேர்ந்த கவிதா (வயது - 30), தேனியைச் சேர்ந்த சித்ரா (வயது - 40), காஞ்சீபுரத்தைச் சேர்ந்த சசிகலா (வயது - 30) ஆகிய 3 பேரின் உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டது.


இதைத் தொடர்ந்து டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. போராட்டம் தொடர்ந்து நீடிக்குமானால் பலரது நிலைமை மிகவும் மோசமாக வாய்ப்புள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் மாலை 10க்கும் மேற்பட்ட கலைஞர்களின் தாரை, தப்பாட்டை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலைஞர்கள் தாரை, தப்பட்டைகளை அடித்து உற்சாகப்படுத்தினர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேரில் சந்தித்தார். அவர்களுக்கு சால்வைகளை அணிவித்து போராட்டத்திற்கு வாழ்த்துகளையும், ஆதரவையும் தெரிவித்தார். உண்ணாவிரதப் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி பாண்டிமா தேவி கூறுகையில் -

தற்போது உண்ணாவிரதம் இருந்து வரும் இடத்திற்கும் பொலிஸார் அனுமதி மறுத்தால், மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம். சென்னைக்கு 20ஆம் திகதி வரும் சோனியா காந்தியைச் சந்தித்து, இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வலியுறுத்துவோம். தினமும் 100க்கும் மேற்பட்ட பெண்கள் எங்களைச் சந்தித்து வருகின்றனர். எங்களது போராட்டம் மேலும் தீவிரமாகும் - என்றார்.

## அத்வானி மீது செருப்பு வீச்சு



போபால், ஏப்.18

மத்தியப் பிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரம் செய்த அத் வானி மீது பா.ஜ.கவின் முன்னாள் பிரமுகர் ஒருவர் செருப்பு வீசினார். அவரைப் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். நல்லவேளையாக செருப்பு அத்வானி மீது படாமல் அருகில் விழுந்தது.

நாடு முழுவதும் நாடாளுமன்றத் தேர்தல் சூடு பிடித்துள்ள நிலையில் முக்கிய தலைவர்கள் மீது செருப்பு வீசும் சம்பவங்கள் நடைபெற்று வரு கின்றன. டில்லியில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர் களுக்கு பேட்டியளித்தபோது சீக்கிய நிருபர் ஒருவர், தனது சப்பாத்தைக் கழற்றி சிதம்பரம் மீது வீனார். அந்தச் சம்பவம் நடந்த இரண்டு நாட்களில் குருஷேத்ரா தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளரும் பிரபல தொழிலதிபருமான நவீன் ஜிந்தால் மீது ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ஒருவர் செருப்பு வீசினார். இந்தச் சூழ்நிலையில், பா.ஜ.கட்சியின் பிரதமர் வேட்பாளரான அத்வானி மீது மத்தியப் பிரதேச மாநிலத்தில் நேற்றுமுன்தினம் செருப்பு வீசப்பட்டது. மத்தியப் பிரதேச மாநிலம் கத்னி மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அத்வானி நேற்று முன்தினம் கலந்து கொண்டார். அவர் மேடைக்கு வந்த சிறிது நேரத்துக்குள் அத்வானியை நோக்கி ஒரு செருப்பு வந்து விழுந்தது. கத்னி மாவட்ட பா.ஜ.கவின் முன்னாள் தலைவர் பாவாஸ் அகர்வால் என்பவர்தான் அந்தச் செருப்பை வீசியமை தெரியவந்தது.

உடனே, அவரைக் கட்சித் தொண்டர்கள் பிடித்து மேடைக்குப் பின்புறம் கொண்டு சென்றனர். பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அகர்வாலைப் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். கட்சிக்குள் ஏற்பட்ட கோஷ்டி பூசலால், அகர்வாலின் பதவி சமீபத்தில் பறிக்கப்பட்டது. அந்த ஆத்திரத்தில் இது போன்று அவர் நடந்து கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ராஜீவ் வழக்கில் நளினி உட்பட 7 பேரை விடுவிக்கக் கோரி மனு



சென்னை, ஏப்.18

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நளினி உட்பட 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. திருச்சியைச் சேர்ந்த இ.வேலுசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கைதான சென்னையை சேர்ந்த நளினி, சின்னசாந் தன், முருகன் (நளினியின் கணவர்), பேரறிவாளன் என்கின்ற அறிவு (தமிழ் நாட்டைச் சேர்ந்த பொறி யியலாளர்) ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்று உறுதி செய்தது.

ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவி ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து உச்ச நீதிமன்று தீர்ப்பு வழங்கியது. இவர்கள் அனைவரும் வேலூர் மத்திய சிறையில் இருந்து வருகிறார்கள். இந்த வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணையில் கடந்த 10 ஆண்டுகளாக எந்த முன்னேற்றமும் இல்லை. 18 ஆண்டுகளாக இந்த 7 பேரும் சட்டவிரோதமாக சிறையிலுள்ளனர். ராஜீவ்காந்தி கொலைக்கும், இவர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆகவே இவர்களை உயர்நீதிமன்றில் ஆஜர்படுத்தி விடுதலை செய்ய வேண்டும். இந்த மனுமீதான விசாரணை முடியும்வரை 7 பேருக்கும் இடைக் காலப் பிணை வழங்க வேண்டும் - என்றுள்ளது.

## முதற்கட்ட வாக்கெடுப்பில் பலியானோர் 18ஆக உயர்வு

புதுடில்லி, ஏப். 18

இந்திய மக்களவைக்கு நேற்றுமுன்தினம் நடந்த முதல்கட்ட தேர்தலில் 17 மாநிலங்களில் உள்ள 124 மக்களவை தொகுதிகளில் வாக் குப் பதிவு நடந்தது. பீகார், ஜார்கண்ட், சட் டிஸ்கர், ஒரிசா மாநிலங்களில் தேர்தலைச் சீர்குலைக்க நக்சலைட்கள் தாக்குதல் நடத்தினர். வாக்குச்சாவடிகளில் குண்டு வீசினர். வாக்குப்பதிவு எந்திரங்களை எரித்தனர். இந்த தாக்குதலில் 5 தேர்தல் அதிகாரிகள், 10 துணை நிலை இராணுவத்தினர் உட்பட 18 பேர் பலியானார்கள்.

ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா உட்பட 17 மாநிலங்களில் உள்ள 124 மக்களவை தொகுதிகளில் முதல் கட்ட தேர்தல் நேற்று நடந்தது. சில மாநிலங்களில் சட்டப் பேரவைக்கும் வாக்குப் பதிவு நடந்தது. காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது. பீகார், சட்டிஸ்கர், ஜார்கண்ட், ஒரிசா மாநிலங்களில் தேர்தலை நக்சலைட்கள் சீர்குலைக்கலாம் என்று முன்கூட்டியே உளவுதுறைக்குத் தகவல் வந்தது. அதனால், அந்த மாநிலங்களில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. அதையும் மீறி இந்த மாநிலங்களில் பல இடங்களில் நேற்றுமுன்தினம் வன்முறை செயல்கள் நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழப் பிரச்சினையால் தி.மு.க. அரசு மீது மக்கள் ஆத்திரம்; எமது அணிக்கே வெற்றி

### வைகோ, அன்புமணிராமதாஸ் தெரிவிப்பு





சென்னை, ஏப். 18

இலங்கைப் பிரச்சினையால் தி.மு.க. அரசு மீது மக்கள் அதிருப்பதியில் உள்ளனர். எனவே, நாடாளுமன்றத் தேர்தலில், அ.தி.மு.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றிபெறும்.

- இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் மற்றும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ ஆகியோர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர் ... தி.மு.க. கூட்டணியில் பா.ம.க., இந்தியக் கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்த நிலையில், பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸின் மகன் டாக்டர் அன்புமணி ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை, சென்னை சாந்தி காலனியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அவருடன், பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி வந்திருந்தார்.

சுமார் 40 நிமிடம் நீடித்த இந்தச் சந்திப்பிற்குப் பின் வெளியே வந்த அன்புமணி செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினேன். சந்திப்பின்போது, புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி வெற்றி பெறுவது குறித்து ஆலோசனை நடத்தினோம்.

இலங்கைப் [illegible] பாடு, விலைவாசி உயர்வு ஆகியவற்றால், மக்கள் தி.மு.க. அரசின் மீது அதிருப்தியில் உள்ளனர். அதனால், 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றிபெறும். தேர்தல் பிரசாரத்தை சனிக்கிழமை முதல் தொடங்குகிறோம் - என்றார்.

பின்னர் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியவை வருமாறு -

40 தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி மகத்தான வெற்றி பெறும். இலங்கையில், தமிழ் இன அழிப்பு யுத்தத்திற்கு மத்திய அரசு ஆயுத உதவி செய்து வருகிறது. இதற்கு தி.மு.க. அரசு உடந்தையாக உள்ளது. இதனால், மக்கள் ஆத்திரத்தில் உள்ளனர். வாக்குகளைப் பெற பணம் கொடுத்து ஜனநாயகத்தையே விலைக்கு வாங்கப் பார்க்கிறார்கள். இதை முறியடித்து மக்கள், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவார்கள். காங்கிரஸ் கூட்டணியைத் தோற்கடிப்பார்கள் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் இரண்டு தாய்மார்கள் தொடர்ந்து ஏழாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம்

## ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் தென்னாபிரிக்காவிலும் தொடர்கிறது

ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, நெதர்லாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதேவேளையில் இத்தாலியிலும் தமிழ் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

ஜேர்மனியில் டுசல்டோவ் நாடாளுமன்றத்தின் முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பெண்கள், இளையோர் உள்ளிட்ட 14 தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

மணிதெரேசா சூசைப்பிள்ளை (வயது - 68), சதீஸ்வரன் ஜெயநிதி (வயது - 49), கோபாலகிருஸ்ணன் இந்திரமணி (வயது -57), சீத்தாராம் (வயது - 29), புவனேஸ்வரன் விஜிதா (வயது - 29), குகதாஸ்தேவன் (வயது - 27),புவனேஸ்வரன் நிவேதா (வயது - 27),சுதர்சன் சிவாநந்தன் (வயது -28), ஜெயந்தி சூரியகுமார் (வயது - 44), றஞ்சினி செல்வமாணிக்கம் (வயது - 44), ஜெயந்தி கீதப்பொன்கலன் (வயது - 45), சரோஜினிதேவி தங்கரத்தினம்(வயது - 57), கங்கா சிவசுப்பிரமணியம் (வயது - 27), அலெக்ஸ் அலெக்ஸ்சான்றா ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திரண்டுவந்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஜேர்மனியின் இரண்டு முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்கள் தமது முழு ஆதரவை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவருகின்றவர்களுக்கு தெரிவித்துள்ளனர். ஜேர்மனிய அரச தலைவருடன் பேச்சு நடத்தி தீர்வுகாண்பதாகவும் வாக்குறுதி அளித்திருக்கின்றனர்.

ஜேர்மனியில் இருந்து வெளிவரும் அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சிகள் என்பன உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றவர்களை பேட்டி கண்டு அவர்களின் போராட்டத்திற்கான காரணத்தை ஜேர்மனிய மக்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றன.

### சுவிற்சர்லாந்தில்

அதேவேளை சுவிற்ஸர்லாந்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் உண்ணா விரதப் போராட்டம் நடத்திவரும் சுவிஸ் தமிழர் பேரவையின் இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணர் தொடர்ந்தும் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றார்.

அவரை சுவிஸ் பொலிஸார் பலாத்காரமாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இருந்தபோதும், அவர் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நீரையோ, உணவையோ வாயில் வைக்க மாட்டேன் என உறுதியாக இருக்கின்றார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் கிருஸ்ணா அம்பலவாணரின் கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அரச தலைவர் செயலகத்தில் இருந்து அழைப்பு வந்திருக்கிறது எனச் சுவிஸ் தமிழர் பேரவையினர் தெரிவித்திருக்கின்றனர்.

### தென்னாபிரிக்காவில்

தென்னாபிரிக்காவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தென்னாபிரிக்காவில் தனது போராட்டத்தை 9 ஆவது நாளாகவும் தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

தென்னாபிரிக்காவில் உள்ள டேர்பன் நகரில் அமைந்துள்ள அருட்பாக் கழகத்தில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறும் இந்தப் போராட்டத்தில் நேற்று முன்தினம் பெருமளவிலான மக்கள் திரண்டுவந்து அவருக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

ஈழவேந்தனின் உடல்நிலை தற்போது பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவரது தோற்றத்தில் களைப்புத் தன்மையும் காணப்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

பல சமூகத்தவர்களும் அவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து வருவதுடன், இந்து மற்றும் கிறிஸ்தவ சமூகத்தினர் பலரும் அவரின் உடல் வலிமைக்காக சிறப்புப் பிரார்த்தனைகளை மேற்கொண்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் இருந்து பழ.நெடுமாறன் உள்ளிட்ட பல தமிழீழ ஆதரவாளர்கள் இவரின் உண்ணாவிரதப் போராட்டம் வெற்றி பெற வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

### நெதர்லாந்தில்

நெதர்லாந்து டென் காக்கில் உள்ள நாடாளுமன்ற முன்றலில் 7 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் இரண்டு தமிழ்த் தாய்மார்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈர்காங்க் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தாயார்களான பிறேமினி ஜெஸ்லின், கஸ்தூரி இரவீந்திரன் ஆகியோருடனேயே இச்சந்திப்பு நடைபெற்றது.

உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த சோசலிச கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈர்காங்க் இரண்டு தாய்மார்களுடனும் உரையாடியதுடன் வன்னி மக்களின் தற்போதைய நிலமைகளை புரிந்துகொள்வதாகவும் தன்னால் முடிந்தவற்றை செய்வதாகவும் உறுதிமொழி வழங்கிச் சென்றார்.

இதேவேளையில் டென்காக் ரயில் நிலையத்தில் இருந்து நாடாளுமன்றம் வரை மாபெரும் உரிமைக்குரல் பேரணி நடைபெறவுள்ளது என நெதர்லாந்து தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்திருக்கின்றது.

### இத்தாலியில்

இத்தாலி பலெர்மோவில் நடைபெற்று வரும் தொடர் போராட்டத்தின் ஒரு நிகழ்வாக நேற்றுமுன்தினம் பலெர்மோவில் உள்ள வெளிவிவகாரத்துறை அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இதில் இத்தாலி வாழ் தமிழ் மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

இப்போராட்டத்தை நடத்திய இளையோர்களை வெளிவிவகாரத்துறை அமைச்சின் அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் அழைத்து சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

### அவுஸ்திரேலியாவில்

வன்னி மக்கள் படுகின்ற அவலங்களைத் தடுத்து நிறுத்தி, அவர்களைப் பாதுகாக்குமாறு கோரி அவுஸ்திரேலியாவில் உண்ணாவிரதம் இருந்து வருபவர்களில் ஒருவர் உடல் நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இலங்கையில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு இலங்கை அரசுக்கு அவுஸ்திரேலியப் பிரதமர் அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகத்துக்கு முன்பாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் போராட்டங்களை நடத்துகின்றனர்.

அவர்களில் சிலர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்தனர். அவ்வாறு உண்ணாவிரதம் இருந்தவர்களில் ஒருவர் நேற்று நினைவிழந்த நிலையில் மயக்கமுற்றார். அவரது உடல்நிலை ஆபத்தான கட்டத்தை அடைந்தது. உடனே அவர் அம்புலன்ஸ் மூலம் அவுஸ்திரேலியாவின் கன்பெரா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

மிகவும் ஆபத்தான நிலையில் காணப்பட்ட அவருக்கு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (சி)

# வன்னி மக்களைப் பாதுகாக்க யுத்த நிறுத்தமே அவசர தேவை

## இரு தரப்புகளிடமும் மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஏப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் போரின் பிடியில் சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக போர் நிறுத்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை அவசரக் கோரிக்கை ஒன்றை விடுவித்துள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள நிலைமைகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு அங்குள்ள மருத்துவ அதிகாரிகள் இருவரை சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்பு கொண்ட போது, அங்குள்ள மோசமான நிலைமைகள் தொடர்பாக அவர்கள் விவரித்துள்ளார்கள் எனவும் மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

உணவு மற்றும் மருத்துவப் பொருள்களுக்கான விநியோகங்கள் அங்கு போதுமானவையாக இல்லாமையால் அவசர மனிதாபிமான உதவிகள் அங்கு தேவைப்படுகின்றன.

போர் தீவிரமடைந்திருந்த வியாழக்கிழமை மட்டும் காயமடைந்த 92 பேர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டனர் என மருத்துவத்துறைப் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை 75 பொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் எனத் தெரிவித்த மற்றொரு மருத்துவப் பணியாளர், அவர்களில் 12 பேர் உயிரிழந்தனர் எனவும் தெரிவித்தார்.

மருந்துப் பொருள்களின் கையிருப்பு மிகவும் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவித்த அவர், மயக்க மருந்து, சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் பிளேட் மற்றும் அடிப்படையான ஏனைய மருத்துவப் பொருள்களும் கையிருப்பில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெறும் பகுதி அரசினால் முற்றுகையிடப்பட்டு, உதவிப் பணியாளர்களோ சுயாதீனமான மனித உரிமைகள் அவதானிகளோ அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாது தடை விதிக்கப்பட்டுள்ளதால், இந்தச் செய்திகளை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

தொடரும் இந்தப் போரால் இந்த வருட தொடக்கத்தில் இருந்து இரண்டாயிரத்து 800 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டும், ஏழாயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தும் இருக்கின்றனர் என மார்ச் மாதத்தில் ஐ.நா. வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மனிதாபிமான அடிப்படையிலான போர் இடைநிறுத்தம் ஒன்று உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்'' என வலியுறுத்தியிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் சாம் சாரிப், ''தொடரும் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் ஆபத்தான நிலைமைக்குள் உள்ளார்கள். அவர்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர்'' எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்வதை உறுதிப்படுத்துவதற்காக சுயாதீனக் கண்காணிப்பாளர்களை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்'' எனவும் கோரிக்கை விடுத்திருக்கும் அவர், ''விடுதலைப் புலிகள் பொதுமக்களை கவசமாகப் பயன்படுத்தக் கூடாது'' எனவும் தெரிவித்திருக்கின்றார். (சி)

# தூதரகம் தாக்கப்பட்டமைக்காக இலங்கைக்கு நோர்வே நட்டஈடு

கொழும்பு, ஏப். 18

நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டமைக்கு இலங்கை அரசுக்கு நட்டஈடு வழங்கவுள்ளதாக நோர்வே தெரிவித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விரிவான முறையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் 'குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவர் என்றும் நோர்வே கூறியுள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றதொரு சம்பவம் மீண்டும் ஒரு தடவை இடம்பெறுவதற்குத் தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் இச்சம்பவம் தொடர்பாகத் தாம் ஆழ்ந்த கவலையடைவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

நோர்வே அரசு புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர். நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வன்னியில் உள்ள மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துவர இலங்கை அரசுக்கு நோர்வே உதவ வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (சி)

# புதுக்குடியிருப்பு பாதுகாப்பு வலயத்தின் மீதான நேற்றைய தாக்குதல்களில் 102 பேர் பலியாகினர்

கொழும்பு, ஏப்.18

புதுக்குடியிருப்பு மக்கள் பாதுகாப்பு வலயத்தின் மீது படையினர் நேற்று நடத்திய தாக்குதல்களில் 102 பேர் பலியானதுடன் 156 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்று இணையத்தளங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன.

நேற்றைய சம்பவங்கள் குறித்து இணையத்தளங்கள் வெளியிட்ட ஏனைய தகவல்கள் வருமாறு:-

'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிகளான வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை பகுதிகளில் படையினர் வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் இரவு வரை ஆட்லெறி ஷெல், பல்குழல் வெடிகணை, துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை அகோரமாக நடத்தினர்.

அவற்றில் 102 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 156 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள மூன்று மருத்துவ சிகிச்சை நிலையங்களில் காயமடைந்த மக்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் பகுதி இடம்பெயர்ந்த மக்கள் வாழ்விடங்கள் மீதும் படையினர் இன்று செறிவான ஷெல் தாக்குதல் களை நடத்தினர். அதேவேளையில் மாத்தளன் பகுதி மீதும் சிறிலங்கா படையினர் செறிவான துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களையும் நடத்தினர்.

இத்தாக்குதல்களில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் - என்றுள்ளது. (அ)

# சிவில் பாதுகாப்பு அலுவலர் சுட்டதில் இருவர் பலி

கொழும்பு, ஏப். 18

அனுராதபுரம் - பதவியா பிரதேசத்தில் சிவில் பாதுகாப்பு அலுவலர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது என கெப்பற்றிக்கொல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் இருவரும் குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தரின் மாமியார் மற்றும் மைத்துனி எனவும் பொலிஸார் கூறினர்.

இருவரையும் சுட்டுக்கொலை செய்த குறித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் அதன் பின்னர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டுள்ளார். அதில் காயமடைந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தரும், அவரது மனைவியும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடிப் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டால் பேச்சுவார்த்தை ஊடான தீர்வுக்கு புலிகள் தயாராம்

லண்டன், ஏப்.18

உடனடிப் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு தமிழரின் மானிட அவலத்தை தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் நிலையில் - பேச்சுவார்த்தை ஊடான அரசியல் தீர்வுக்கு நாம் தயார் என்பதனை சர்வதேச சமூகத்திற்கு உறுதிப்படத் தெரிவிக்கின்றோம்.

விடுதலைப்புலிகளின் வெளியுறவுத் துறைப் பொறுப்பாளர் கே.பத்மநாதன் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்திருப்ப தாக இணையத்தளங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டுள்ளன.

அந்தஅறிக்கையில்சிலபகுதிகள்வருமாறு:-

இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கு எதிரான நீதியற்ற செயல்களின் வரலாற்று விளைவே புலிகளின் ஆயுதப்போராட்டம்.

அனைத்துலக சமூகம் தமிழ்மக்களுக்கு எதிரான அநீதிகளை தீர்த்து வைக்கும்போது ஆயுதப்போராட்டத்தின் தேவை தாமாகவே நீங்கிவிடும்.

அரசியல் தீர்வின் ஊடான தமிழர் பிரச்சினைக்கான தீர்வே இலங்கைத் தீவில் சமாதானத்தையும் உறுதித்தன்மையையும் ஏற்படுத்தும்.

புலிகளின் உடனடி நிரந்தரப் போர் நிறுத்த அழைப்பை நிராகரித்த சிறிலங்கா அரசால் 15ஆம் திகதி தொடக்கம் தமிழ்மக்கள் தஞ்சமடைந்துள்ள பாதுகாப்பு வலயம் மீதான தாக்குதல்களினால் பலநூறு தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நாகரிகமடைந்த அனைத்துலக சமூகத்திற்கு தார்மீகரீதியாக இப்பெரும் அவலத்தை நிறுத்தும் கடப்பாடு உள்ளது. அதிலும் முக்கியமான டோக்கியோ இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வேயுடன் இந்தியாவிற்கும் இப்போரை சிறிலங்கா அரசின் ஊடாக நிறுத்தி உடனடி நிரந்தர போர் நிறுத்தத்தை கொண்டுவரும் வல்லமையும், சிறிலங்கா அரசுடனான நலன்சார் செல்வாக்கும் உள்ளது.

அனைத்துலக சமூகத்திற்கு பாதுகாப்பு வலயத்தில் நிகழும் அவலநிலை தெரிந்திருந்தும் போர்நிறுத்தத்தை கொண்டுவரவோ, மானிட அவலத்தை தடுத்து நிறுத்தவோ முன்வராமை கண்டு அதிருப்தியடைந்துள்ளோம்.

அனைத்துலகசமூகத்தின் செயலற்ற வலுவற்ற தன்மை இராணுவத் தீர்வை நோக்கி அரசை ஊக்குவிக்கும் அதே வேளை இந்நாடுகள் அரசியல் தீர்வை நோக்கி உதவவில்லை.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுயல்வது இலங்கை தீவிற்கோ அல்லது இப்பிராந்தியத்திற்கோ உறுதித் தன்மையை கொண்டுவரப்போவதில்லை. தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வே சமாதானத்தை இலங்கைத் தீவிற்கு கொண்டு வரும்.

இம்முக்கிய தருணத்தில் அனைத்துலக சமூகத்திடம் புலிகள் கேட்டுக்கொள்வது என்னவெனில் உடனடி நிரந்தர போர்நிறுத்தம், மனிதாபிமான உதவிகளுக்கான சாத்தியமான களநிலை உருவாக்கம், நியாயமான அரசியல் தீர்வுநோக்கிய செயற்பாடுகளின் ஆரம்பம் என்பனவாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்வர் கொண்ட குழுவினர் இந்திய வெளிவிவகாரச் செய லாளர் சிவ் சங்கர் மேனன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோரை சந்தித்து பேசி இருந்தனர்.

அந்தப் பேச்சுகளின் விவரம் குறித்து புது டில்லியில் நேற்றுச் செய்தியாளர் களிடம் விளக் கிய அவர்கள், இந்திய அரசுடன் நாங்கள் நடத்திய பேச்சுகள் மனநிறைவைத் தருகின்றன.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

தாக்குதல் நிறுத்தாவிடில் 50 ஆயிரம் பேர் உயிரிழக்கும் அபாயம்

எனவே, தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்திய அதிகாரிகளிடம் விளக்கினோம். அவர்களும் உரிய நடவடிக்கை எடுப்பதாக எங்களிடம் உறுதியளித்தனர். எங்களது வேண்டுகோளுக்குப் பின்னர் இலங்கையில் சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இந்திய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்கிறோம். அதே நேரத்தில் இந்தியாவின் கோரிக்கையை ஏற்க இலங்கை அரசு மறுத்துவிட்டால் ஐ.நா. சபையில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை இந்தியாவே மேற்கொள்ள வேண்டும்- என்று வலியுறுத்தினர்.

இலங்கை அரசின் இனப்படுகொலை குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கிற்குக் கோரிக்கை மனு ஒன்றை அளித்திருக்கிறோம் என சம்பந்தனும் மற்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்காவிட்டால் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் சிக்கியிருக்கும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிரிழப்பர் - என்றும் அவர்கள் கூறினர். (அ-சி)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது46) என்பவர் வடபழனியில் உள்ள தமிழக தேர்தல் அலுவகத்துக்கு முன்பாக மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தார்.

படுகாயமடைந்த அவர் கீழ்ப்பாக்கம் அரச மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ் நாட்டில் முத்துக்குமார் முதல் இதுவரை 12 பேர் ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்துள்ளனர். (அ-1)

## போர் நிறுத்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் இந்தியா துண்டித்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி, வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு முதல்வர் கருணாநிதி அவசர தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் விடுத்துள்ள வேண்டுகோளை நன்றியுடன் வரவேற்கிறோம். இந்த போர் நிறுத்த வேண்டு கோளை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் இலங்கையுடனான அனைத்துத் தூதரக உறவுகளையும் இந்தியா துண்டித்துக் கொள்ள வேண்டும் - என்று கருணாநிதி தமது தந்தியில் கேட்டுள்ளார். (அ-சி)

# சீமான் விடுதலை

சென்னை, ஏப்.18

புலிகளை ஆதரித்து பேசினார் என வழக்குப் பதிவு செய்யப்பட்ட இயக்குநர் சீமான் மீது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தேசிய பாதுகாப்பு சட்டத்தை ரத்துச் செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால் அவர் விடுதலை ஆகிறார்.

## ஐ.நா. விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் பான் கீ மூனின் விசேட பிரதிநிதி விஜய் நம்பியாருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்றுக்காலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வன்னியில் பாதுகாப்பு வலயத்திற்குள் காணப்படும் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அரசு அறிவித்திருந்த இருநாள் மோதல் தவிர்ப்பு தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது கலந்தாலோசிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய யுத்தம் தொடர்பாகவும் வன்னி மக்களின் நிலைமை தொடர்பாகவும் ஐ.நா. கொண்டிருக்கும் நிலைப்பாட்டை விஜய் நம்பியார் இச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறினார் என்று கொழும்பில் உள்ள இலங்கைக்கான ஐ.நாவின் காரியாலய வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை, வன்னியில் பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்குண்ட மக்களை மீட்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை பற்றியும் வவுனியா அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் நலன்கள் தொடர்பில் அரசு மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விஜய் நம்பியாரிடம் விரிவாக விளக்கிக் கூறினார் என ஜனாதிபதி செயலக வட்டாரம் தெரிவித்து உள்ளது.

மக்களுக்கு எதுவித பாதிப்பும் இன்றியே இலங்கைப் படையினர் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் ஜனாதிபதி விஜய் நம்பியாரிடம் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவுடன் மதிய உணவை முடித்த கையோடு நம்பியார் நியூயோர்க் புறப்பட்டுச் சென்றார். (அ-1)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர்களையும் நாளை முற்பகல் 11 மணிக்கு யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு பயண ஏற்பாடுகளுடன் வரவேண்டும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-7)

## வன்னி மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் அறங்காவலர் சட்டத்தரணி பசுபதி சிதம்பரம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மா.மனோகரன், சார்ள்ஸ் சந்தியாகு, சிவராசா இராசையா, மாணிக்கவாசகம், சைல்டு நிறு வனத்தின் தலைவர் மருத்துவர் ஐங்கரன், 'மலேசியா இன்று' இணைய இதழின் ஆசிரியர் காத்தையா உட்பட எழுவர் அடங்கிய குழுவினர் அமெரிக்க தூதரகத்திடம் மனு வினைக்கையளித்தனர்.

இலங்கையில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றநிலையில், அமெரிக்கா மனிதாபமான அடிப்படையில் இலங்கை விவகாரத்தில் தலையிட்டு போரை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், தமிழ் மக்களின் உரிமை பூர்வமான கோரிக்கைகள் நிறைவேறவும் செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-1)

## போர் நிறுத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைக் கேட்டுக்கொண்டார். உலக நாடுகளும் ஐ.நாவும் போர் நிறுத்தத்தை நீடிக்குமாறு கேட்டுக்கொண்டதை இலங்கை அரசு ஏற்கனவே மறுத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தாக்குதல் நிறுத்தத்தை நீடிக்க வேண்டும். பொதுமக்கள் மேற்கொண்டும் பாதிக்கப்படாமல் இருக்கவும் அவர்கள் பத்திரமாக வெளியேறவும் இது அவசியம் என்றும் முகர்ஜி கூறினார்.

இலங்கையில்தொடர்ச்சியாக தீவிரப்படுத்தப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையினால் இந்தத் தருணத்தில் பொதுமக்களுக்கு பேரழிவை ஏற்படுத்துவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி நிலைகுறித்து இந்தியா ஆழ்த்த கவலை கொண்டுள்ளது.

தொடரும் மோதல்களால் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட இரண்டு நாள் யுத்த நிறுத்தம் மக்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறுவதற்கு போதிய கால எல்லை அல்ல.

### இந்தியா ஒருபோதும் மத்தியஸ்தம் வகிக்காது

எனவே இலங்கை அரசு யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுக்கொள்கிறது. எனினும் இந்தியா எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்காது என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றது.

சிவிலியன்களின் பாதுகாப்பை இலங்கை அரசு நிச்சயமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கை அரசு அறிவித்த தற்காலிக மோதல் இடைநிறுத்தத்தை இந்தியா வரவேற்றிருந்தது. ஆனால் இந்த மோதல் இடைநிறுத்தத்தை இலங்கை அரசு கட்டாயமாக நீடிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்க வேண்டிய அதேநேரத்தில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் மனிதாபிமானத் துன்பியல் குறித்து இலங்கை அரசு மறந்துவிட முடியாது- என்றார். (அ-ப-சி)


இது புதியவருக்காக.
A/L தமிழ் Subra 14
C,S அல்ல A,B பெற | மின்னொளி அதிரடி வகுப்பு
நாக.தமிழிந்திரன்
2011புதிய - ச.ஞா 9.00
செவ்வாய் 6.00

பிரத்தியேக வகுப்புக்கள்
A/L 2011
ஆரம்பம்:- 18.04.2009
சனி, ஞாயிறு - 3.30 p.m
தமிழ் - ஆர்.எஸ்.சந்திரசேகர்
இந்து நாகரிகம் / இந்துசமயம் } எஸ்.சிறீதரன்
C.M.S லேன், கொக்குவில் மேற்கு.

பொருளியல்
NB.கஜீதரன்
A/L 2011
பொருளியல் அறிமுகம்
sat,sun. 9-10am
A/L 2010
தேசிய மதிப்பீடு
sat, sun 7-8am
A/L 2009
வங்கியியல்sat, sun 10-11am
ஆரம்பம் 18.04.2009 (sat)
NEC

கணக்கீடு
P.பகீரதன்
B.B.A(F.M Spl)
கம்பனி முடிவுக் கணக்குகள்
Sat, Sun - 2-3 p.m
ஆரம்பம்:-18.04.2009
(Sat- 2.00pm)
NEC
Clock Tower Road, Jaffna

33ஆவது சேவையில்
O/L Day Class (8.30-2.00)
பிரிவு II ஆரம்பம் 20.04.2009 8.30 மணி
பிரிவு III மிக விரைவில்
பிரிவுVI மட்டுமே
விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை: இல.417, கே.கே.எஸ். றோட், (யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

SHAMROCK
ஈச்சமோட்டை யாழ்.
O/L DAY CLASS
(Best Staff)
A/L 2011 கலை, வர்த்தக, கணிதப்பிரிவுகள்

N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ். றோட் இணுவில்
O/L DAY CLASS
ஆரம்பம்:- 20.04.2009
திங்கள் 8.00am
Note: கடந்த வருடம் O/L பரீட்சையில் 100% சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி, காரைநகர். | நீராவியடி, யாழ்.நகர். | அந்தோனியார் கோயில் அருகாமை, மானிப்பாய்.
A/L 2011
எமது கல்வி நிறுவனங்களின் அனைத்து வகுப்புகளுக்குமான நாள் வகுப்புகள், O/L Day Class மற்றும் A/L 2011 கலை, வர்த்தக பிரிவுகள் பின்வரும் நேரங்களில் 20.04.2009 இல் ஆரம்பமாகின்றன.
யாழ்ப்பாணம் 9 am சண்டிலிப்பாய் 11am
மானிப்பாய் 2 pm காரைநகர் 4 pm
O/L Day Class

Bajaj தற்போது விற்பனையில்...
Pulsar பல்சர் 200 கறுப்பு, சிகப்பு
Pulsar பல்சர் 180 கறுப்பு, சிகப்பு XCD கறுப்பு, சிகப்பு, நீலம்
டிஸ்கவரி Discover 135 கறுப்பு, சிகப்பு, நீலம்.
S.J.MOTORS
CT 100 மரூன் கிறீன் சில்வர்
இல.164,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org